ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி



## இலங்கையிலிருந்து முதல் புனிதர்

## அருளாளர் யோசப்வாஸ் அடிகளார்!

40/=

சமய - சமூக - இலக்கிய வெளியீடு

ஒக்டோபர் - 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஒக்டோபர் - 2014


மலர் - 46 இதழ் - 09



- **ஆசிரியர்**
  லெஸ்லி ஜெயகாந்தன்
- **இணை ஆசிரியர்**
  மலர்வேந்தன்
- **துணை ஆசிரியர்கள்**
  மெற்றில்டா இராஜேந்திரம்
  பெஸ்லீயோ வாஸ்
  பைந்தமிழ்க்குமரன் டேவிட்
- **ஆலோசகர்**
  A.G.இராஜேந்திரம்
- **கணினி வடிவமைப்பு**
  சுபாஜெனி சங்கர்



- **வெளியீடு**
  சமூகத் தொடர்பு நிலையம்.
  மட்டக்களப்பு மறை மாவட்டம்



- **முகவரி**
  சமூகத் தொடர்பு நிலையம்
  அ.பெ.எண் – 44
  மட்டக்களப்பு.



- **பதிப்பகம்**
  வணசிங்கா அச்சகம்
  மட்டக்களப்பு.


## உள்ளே....




அன்புடன் உங்களோடு .................. 01
திருத்தந்தையின் இலங்கை ......... 02
பட்டங்களும் விருதுகளும் ............. 03
அருளாளர் யோசப்வாஸ் ............... 04
கால்நகம் ........................................ 05
விசேஷ செபநாள்............................ 06
வைர விழாக் கண்ட ....................... 08
மாணவர் பக்கம் ............................. 11
பாடசாலை விளையாட்டுப் ........... 12
எண்ணிப்பார்க்கையில் ................... 14
தருணம் பார்த்து ............................ 15
தீர்க்கதரிசனங்களின் நிலம் ......... 16
வீட்டு மருத்துவம் ......................... 18
வரலாற்றில் மனித உரிமை......... 19
திரை விமர்சனம் ........................... 22
கடுகுக் கதை ................................. 24
மட்டக்களப்பு மறைமாவட்ட ......... 25
புனிதர்களை அறிவோம் .............. 26
விவிலியம் கற்போம் ..................... 27
அறிவை வளர்ப்போம் ................. 28


**ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)**


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 40/=
ஆண்டு சந்தா : 450/=
(தபாற் செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அன்புடன் உங்களோடு.....!

அரசன் ஒருவன் இருந்தான். அவன் வீணை வாசிப்பதிலே தலைசிறந்தவன். ஒருநாள் அந்த வீணை பழுதடைந்து விட்டது. எப்படியாவது அதைத் திருத்த பலபேரை நாடினான், யாராலும் முடியவில்லை. பல கலைஞர்கள் முன் வந்தார்கள், அவர்களாலும் முடியவில்லை. இசை இல்லாமல் அவனால் வாழ முடியவில்லை. ஒவ்வொரு நொடியும் அமைதி இழந்து நின்றான். வேதனைக்கு மேல் வேதனை, துன்பத்துக்கு மேல் துன்பம். நிலை தடுமாறினான். இந்த வீணை எழுப்பும் இசை இல்லாமல் என்னால் வாழ முடியவில்லையே என ஓலமிட்டான். இதை அறிந்த ஒரு பிச்சைக்காரன் அதை திருத்தித் தருவதாக முன்வந்தான். அனைவரும் அவனை எள்ளி நகையாடினர். "நாட்டிலுள்ள எல்லாக் கலைஞரும் முயன்றும் முடியவில்லை. இவனால் இதை எப்படிச் செய்யமுடியும்" என்று அரசர் உட்பட அனைவரும் ஏளனமாகச் சிரித்தார்கள். 'உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' என்று எண்ணி அரசன் அவனுக்கு வாய்ப்புக் கொடுத்தான். பிச்சைக்காரனிடம் அரசன் வீணையைக் கொடுக்க, சிறிது நேரத்திலேயே அதைப் பழுதுபார்த்துக் கொடுத்தான். அரசன் அதை மீட்டிப் பார்த்தான். அதே இனிமை. எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தான். அரசன் அந்தப் பிச்சைக்காரனிடம் "எவ்வளவோ கலைஞர்கள் முயன்றும் முடியாத இதை எப்படி உன்னால் மட்டும் சரிசெய்ய முடிந்தது...?" என்று கேட்டான். அதற்குப் பிச்சைக்காரன் "இந்த வீணையைச் செய்தவனே நான்தானே, எனவேதான் இதில் என்ன குறை என்ன பழுது என்று என்னால் பார்க்க முடிந்தது; பழுது பார்க்கவும் முடிந்தது" என்றான்.

இந்த உலகம் இறைவனால் படைக்கப்பட்டது. இது சீரோடும் சிறப்போடும் இருந்தது. அமைதி, மகிழ்ச்சி, ஒற்றுமை நிறைந்ததாக இருந்தது. ஆனால், மனிதனின் பாவ வாழ்க்கையால் இவ்வுலகம் சீர்கெட்டுவிட்டது. உயரிய நிலையை இழந்துவிட்டது. இன்று எங்கு பார்த்தாலும் அழிவுகளும் ஆக்கிரமிப்புகளும் மனிதனை மனிதன் விழுங்கும் நிலையும், சாதி, மத, இன வெறியால் தன்னை அழித்துக் கொள்ளும் மனித இனத்தையே நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. நீதி, நேர்மை, உரிமைகள் அற்ற இருண்ட உலகமாக இவ்வுலகம் காணப்படுகின்றது.

எனவே, இவ்வுலகம் எழுச்சி பெற, மனித சமுதாயத்தை சீர்படுத்த, செம்மைப்படுத்த எத்தனையோ பேர் முயன்றார்கள்; முடியவில்லை. எனவே, கர்த்தர் கன்னி மரியின் கருவறையில் உருவாகி மனிதனாக வந்தார். மனித இனத்தை மீட்டார். இம்மனித இனம் இழந்த அருள்வாழ்வை மீண்டும் பெற்றுத் தந்தார்.

அன்பே கடவுள் என்றால்
அன்புக்கு ஈடேது சொல்

கடவுள் பேசும் மொழி எது? கடவுள் பேசும் மொழி அன்பு மொழி. திரு மொழி, இனிய மொழி, அன்பு மொழி பேசுவது மட்டுமல்ல அன்பிற்காகவே வாழ்ந்தார், இறந்தார், எல்லாம் அன்பு மயம். நமது மொழி, அன்பு மொழி. நமது பேச்சு அன்புப் பேச்சு. நம் செயல் அன்புச் செயல். நம் வாழ்வு அன்பு வாழ்வாக அமையும்போது எல்லாம் அமைதியாகிவிடும். அன்புமொழி, ஆணவ மொழியாக, அதிகார மொழியாக, ஆதிக்க மொழியாக மாறிவிடக்கூடாது. அன்புச் செயல்களுக்குப் பதிலாக, மற்றவர்களுக்குக் குழிபறிக்கும் குழப்பவாதிகளாக நாம் வாழ்ந்துவிடக்கூடாது. மற்றவரை அன்பினால் வாழவைப்பதற்குப் பதிலாக அவர்கள் வாழ்வைச் சீரழித்துவிடக்கூடாது.

அன்புடன் நாளைத் தொடங்கு, அன்புடன் நாளைச் செலவழி, அன்புடன் நாளினை முடி! ஏனெனில் கடவுள் அன்புமயமானவர்.

எனவே, கடவுள் அன்பாய் இருப்பதுபோல் நாமும் அன்பாய் இருப்போம். ஒருவர் ஒருவரை மிதித்து வாழாமல் மதித்து வாழ்வோம். மனிதனை மிதிப்பது இறைவனை மிதிப்பதற்குச் சமனாகும். விசுவாசம், நம்பிக்கை, இவற்றைவிடச் சிறந்தது அன்பே!

● ஆசிரியர்

### இறைவாக்கு

"ஆண்டவரே எனக்கு ஊன்றுகோலாய் இருந்தார்.
நெருக்கடியற்ற இடத்திற்கு அவர் என்னைக் கொணர்ந்தார்.
நான் அவர் மனதிற்கு உகந்தவனாய் இருந்ததால்
அவர் என்னை விடுவித்தார்"

(தி.பா 18:18-19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருத்தந்தையின் இலங்கை விஜயம் - 2015

கிறிஸ்து இயேசுவில் அன்பார்ந்தவர்களே!!!

**திருத்தந்தையின் இலங்கை விஜயத்திற்கு ஆயத்தமாவோம்...**

எமது திருத்தந்தை பிரான்சிஸ் அடுத்த வருடம் தை மாதம் 13ம், 14ம் திகதிகளில் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருப்பதாக அறிவித்துள்ளார். அவையாவன,

1. 14ந் திகதி - காலை 08.30 மணிக்கு - காலி முகத்திடலில் இடம்பெறும் கூட்டுத்திருப்பலி
2. 14ந் திகதி - பி.ப. 3.30 - 4.30 வரை - மடுத்திருப்பதியில் இடம்பெறும் மரியன்னை வழிபாடு

1. பயண ஏற்பாடுகள்:

இரண்டு நிகழ்வுகளும் ஒரே தினத்தில் தொலைவில் உள்ள இரு வேறு இடங்களில் இடம்பெறவிருக்கின்றன. ஒருவர் இரண்டு நிகழ்வுகளிலும் பங்குபற்றுவது கடினம். எனவே, எந்த நிகழ்வில் கலந்து கொள்வது (கொழும்பிலா? மடுவிலா?) என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும். ஒவ்வொரு பங்கிலிருந்தும் பலர் இவற்றில் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து அதில் கலந்துகொள்ள வேண்டுமென எதிர்பார்க்கின்றோம். கலந்துகொள்ள விரும்புகிறவர்கள் 2014 செப்டம்பர் மாதம் முடிவதற்கு முன்பு தங்கள் பெயர்களை பங்குத் தந்தையிடம் பதிவு செய்துகொள்ளவும். கலந்து கொள்பவர்களின் தொகையைப் பொறுத்து பேருந்தில் செல்வதா? தொடரூந்தில் செல்வதா எனத் தீர்மானிக்கப்படும்.

2. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வருகைக்கான நமது ஆன்மீக ஆயத்தம்:

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் வேண்டுகோளின்படி திருத்தந்தையின் வருகைக்காக பல்வேறு வகையான முன்னேற்பாடுகளும், ஆயத்தங்களும் தலத் திருச்சபையில் பங்கு ரீதியாகவும் செய்யப்படுகின்ற அதேவேளையில் ஆன்மீக ஆயத்தங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக, ஞாயிறு திருப்பலி வழிபாடுகளில் நடத்தக்கூடிய விசுவாசிகளின் வேண்டுதல்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கை விஜயத்திற்கான ஆன்மீக ஆயத்தப் பணிகள் செயற்பாட்டாளர் குழுக்கள் மூலம் தரப்பட்டுள்ளன. இக் குழுவின் எமது மறைமாவட்டப் பிரதிநிதியாக அருட்பணி தேவதாசன் அடிகள் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தரும் வழிகாட்டலின்படி முழுமையான ஆன்மீக ஆயத்தம் ஒன்றை தவறாது மேற்கொள்ளுமாறு கேட்டு நிற்கின்றோம்.



2. விசேட தேசிய செப தினம் (செப்டம்பர் 14, 2014 - ஞாயிறு)

திருத்தந்தையின் இலங்கை விஜயத்துக்கு தனிப்பட்ட ரீதியிலும் குடும்ப ரீதியிலும் ஆயத்தம் செய்யவும், எமது பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்கவும் ஒரு விசேட தினத்தை அனுசரிக்குமாறு இலங்கை ஆயர் பேரவை அழைப்பு விடுத்திருந்தது. அதாவது, கடந்த செப்டம்பர் 14, ஞாயிறு தினத்தை, முத்திப்பேறு பெற்ற ஜோசப்வாஸ் அடிகளாரை புனிதர் நிலைக்கு உயர்த்த வேண்டி செபிக்கும் தேசிய செப தினமாக அனுசரிக்க கேட்டுக்கொண்டது. அதனை நடைமுறைப்படுத்த பின்வரும் வழிகளை முன்வைத்திருந்தனர்.

அ. அன்றைய தினம் ஞாயிறு என்பதால் திருப்பலியை இக்கருத்துக்காக ஒப்புக்கொடுத்து, ஒவ்வொரு குடும்பமும் ஜோசப்வாஸ் நிதியத்துக்கென தனிப்பட்ட பங்களிப்பை காணிக்கையாக திருப்பலி வேளையில் கையளித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆ. விசேட நற்கருணை ஆராதனை வழிபாடுகள், பக்திச் சபைகள் ஒவ்வொன்றாகச் செபமாலை சொல்லுதல், அன்பியப் பகிர்வுகள் போன்றவற்றையும் நாள் முழுவதும் ஒழுங்குசெய்தல்.

இ. அனைத்து இறைமக்களும் பங்குபற்றக்கூடிய, செப வழிபாடுகளை பங்குத் தலத்தின் வசதிக்கேற்ப ஒழுங்குசெய்தல்.

இவ்விதமாக இலங்கை வாழ் கத்தோலிக்க மக்களாகிய நாம் அனைவரும் ஒரே குடும்பமாக இணைந்து, ஒரே குரலில் எமது விண்ணப்பங்களை மூவொரு இறைவனிடம் இரந்து கேட்கையில், நிச்சயமாக இறைவன் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கை விஜயத்தின்போது முத்திப்பேறு பெற்ற ஜோசப்வாஸ் அடிகளாரை புனிதராக உயர்த்தும் மாபெரும் கொடையை அருளுவார் என நம்பலாம்.

✠பேரருட் தந்தை ஜோசப் பொன்னையா,
மட்டக்களப்பு ஆயர்




இந்தக் காலத்தில் பட்டங்களும் விருதுகளும்
படும்பாடு.... பட்டது பாடு....
மகாகவி பாரதியாருக்கு நிகராக
இன்னொரு கவிஞர் தோன்றமாட்டார்
என எண்ணியிருந்தோம், ஆனால்
கவிஞர் மகாகவி, அப்பெயரைத்
தனது புனை பெயர் ஆக்கிக்கொண்டார்
அவருக்கும் மேலாக இன்னொரு கவிஞர்
கவிக்கோ அப்துல் ரஹ்மான் என்று
தனது பெயரை நிலைநிறுத்திக் கொண்டார்....
அது பரவாயில்லை என்று எண்ணியிருக்க
இன்னொரு கவிஞர் கவிக்கோ என்று
பட்டம் சூட்டிக் கொண்டார்
மலையும் மடுவும் ஒன்றாகிவிட்டன
சிலரது கடிதத் தலைப்புகள்
பட்டங்களால் நிரம்பி வழிகின்றன
பட்டங்கள் எதுவும் இல்லாமலே
பனிச்சிடுபவர்கள் பலர் இருக்கிறார்கள்
எத்தனை பட்டங்கள் இருந்தாலும்
எளிய பெயர் ஒன்றை மட்டும்
பயன்படுத்துபவர்கள் சிலர் இருக்கிறார்கள்
இவர்களுக்குப் பட்டங்கள் எதுவுமில்லை
சுமக்க முடியாத பட்டங்களைத் தாங்குவோர்
இவற்றைக் கவனித்தால் நல்லது.

■ இரா நாகலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நம் தாய்த்திரு நாட்டில், கத்தோலிக்கமும் கத்தோலிக்கரும் வேரோடு அழிக்கப்பட்டு முற்றாக மறைந்து விடும் அபாயமான நிலைக்கு அண்மித்த நிலையை அறிந்து, கத்தோலிக்கத் திருச்சபையை மீண்டும் தழைக்கச் செய்ய வேண்டும் என்ற இலட்சியத்துடன் இறை அழைப்பிற்கு அடிபணிந்து, மாறுவேடமணிந்து, இலங்கை மண்ணில் காலடி எடுத்து வைத்து, நற்செய்தி அறிவிப்பை ஆர்வத்துடன் மேற்கொண்ட இலங்கையின் அப்போஸ்தலர் எனப் போற்றப்பட்ட அருளாளர் ஜோசப் வாஸ் அடிகளாரின் மறைக்கல்விப் பணியைப் பற்றி, தேசிய மறைக்கல்வி தினத்தில் சிந்திப்பது மிகவும் பொருத்தமானதும், காலத்தின் கட்டாயமுமாகும். ஏனெனில் அவரைப் புனிதராக உயர்த்தும் நிகழ்வு திருத் தந்தையின் இலங்கைக்கான விஜயத்தின்போது இடம்பெற வேண்டும் என தேசிய மட்டத்தில் பங்கு ரீதியாக வும் மறைமாவட்ட ரீதியாகவும் பிரார்த்தனைகளும் வழி பாடுகளும் உத்வேகத்துடன் இடம்பெறுவதை நாம் அறிவோம்.



நமது நம்பிக்கையால் பிறரது நம்பிக்கையை ஆழப்படுத்துவது தான் ஒரு சிறந்த மறைக்கல்வியாளரின் உயர்ந்த பண்பாகும். அந்த வகையில் அருளாளர் ஜோசப்வாஸ் அடிகள் தமது ஆழ்ந்த நம்பிக் கையைச் சிறந்த முறையில் பிறருக்கு வெளிப்படுத்தும் ஆசிரியராக வலம் வருகிறார். தனிப்பட்ட நபராகச் செயல் படாது குழுவாக, பிற உடனுழைப்பாளர்களையும், குருக்க ளையும் இந்தியாவிலிருந்து வருவித்து அவர்களோடு இணைந்து மக்களின் நம்பிக்கைகளை வளர்ப்பதில் ஆர்வம் காட்டினார் ஜோசப்வாஸ்.

நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று மக்களின் மனநிலையைப் புரிந்து கொண்டவராகப் பணியாற்றி னார். நற்செய்திப் பணிக்காக எதையும் செய்யத் தயாராக இருந்த ஜோசப்வாஸ் இரண்டு மொழிகளையும் நன்கு கற்றறிந்தார். தமது பிரதிநிதிகளாகச் சிலரை நியமித்து மறைக்கல்விப் பணி தொடர்ந்து நடைபெற முயற்சி செய் தார். அவர் பல இடங்களுக்கும் மக்களைத் தேடிச் செல்ல மேற்கொண்ட பயணங்கள் மறைக்கல்விப் பணிக்கு அவர் தந்த முக்கியத்தவத்தை வெளிப்படுத்துகின்றன.

இயேசுவின் சீடர்களை உருவாக்குவதே மறைக் கல்விப் பணியின் முக்கிய நோக்கம். ஜோசப்வாஸ் அடிக ளாரின் ஒரே நோக்கம் டச்சுக்காரரின் கலாபனையி னால் நம்பிக்கையில் தளர்ச்சி அடைந்திருந்த கத்தோ லிக்க மக்களுக்கு ஊக்கமளித்து நம்பிக்கையில் நிலைத்திருக்க வைப்பதாகும். "உன்னத இலட்சியம் உறங்குவதில்லை" என்று சொல்வது போல் அயராது உழைத்து மங்கிப் போயிருந்த ஒளியை மீண்டும் ஒளிரச் செய்தார். மழுங்கிக்கொண்டிருந்த மறைக்கு மீண்டும் புத்துயிர் கொடுத்தார்.

"என் பிள்ளைகளே! உங்களில் கிறிஸ்து உருவாகும் வரை உங்களுக்காக நான் மீண்டும் பேறுகால வேதனையுறுகிறேன்". (கலா 4:19) என்று எடுத்துரைத்த பவுலைப் போன்று அருளாளர் ஜோசப்வாஸ் தாய்க்குரிய பாசத்துடனும் மக்களை கிறிஸ்துவுக்கு உரியவராகவும் உருவாக்கினார். மறைக்கல்வி ஆசிரியர் களின் உருவாக்கத்திலும் கண்ணும் கருத்துமாய் இருந்தார். நம்பிக்கை விதையை விதைப்பதோடு மட்டும் மறைக்கல்விப் பணி ......


17ம் பக்...

அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் பார்வையில் எம் நாட்டில் மறையை உயரோட்டம் செய்வோம்!

**தேசிய மறைக்கல்வி தின செய்தி**




அரசியல் மேடை அளவற்ற கூட்டம்
கல்வியில் புரட்சி கலங்கரை நானே!
மார் தட்டி நிற்கும்
போலித்தலைவர்கள்
நேரமும் கழிகிறது
என் நினைவெல்லாம் வீட்டிலே
காய்ச்சலுடன் கண்ணீர் விட்டழும்
கடைசி மகளின் நினைவுகள்
கொஞ்சம் கொஞ்சமாக
மாணவர் பெயர்கள்
இடையிடையே சாதனை முழக்கங்கள்
கடற்கரை மணலில்
கால்கள் புதைகின்றன
நேரமோ பத்தரை
மகனுடன் வந்தேன்
பகீரதப் பிரயத்தனம்
வழிகண்டு பிடித்து




உந்துருளியை உருட்ட
கருங்கல்லொன்று புரண்டு
கால்நகம் பேர்த்தது
குருதிச் சொட்டுகள்
வாரங்கள் இரண்டு
உயிர்போகும் வேதனை
இன்றுடன் ஓய்ந்ததா?
கால்நகம் கழன்று விழுந்தது
ஷெல்லடி பட்ட தகரடப்பாபோல்
சீர்கெட்டுப்போன கால்விரல்
எதில்பட்டாலும் சுள்ளென்ற வலி
ஒரு வகையில் பார்த்தால்
நகமற்ற கால்விரலும்
நலமற்ற மனையாளும்
ஒன்றாகிப் போயினர்
வாழ்க்கைத் தத்துவமாய் .....

- பைந்தமிழ்க்குமரன் டேவிட் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புரட்டாதி 28 ஞாயிறு — விசேஷ செபநாள்



## உலக ஆயர் மன்றத்தின் மேலதிக 3வது பொதுக் கூட்டம்

### "நற்செய்தி அறிவிப்பு அமைப்பில் மேய்ப்புப்பணி சார்ந்த சவால்களில் குடும்பம்"

என்ற தலைப்பில் உலக ஆயர் மன்றத்தின் மூன்றாவது பொதுக்கூட்டம் ஐப்பசி மாதம் 5ந் திகதி முதல் 19ந் திகதி வரை நடைபெறுவதற்கு ஆயத்தமாக புரட்டாதி 28ந் திகதி ஞாயிறு தினத்தை விசேட செபநாளாக ஒதுக்கி வைத்திருக்கிறது.

சகல ஆலயங்கள், பங்குக் குழுக்கள், துறவியர் இல்லங்கள், மன்றங்கள், இயக்கங்கள், மன்றம் நடக்கும் போதும், மன்றம் நடக்கும் நாட்களில் திருப்பலியின் போதும், மற்ற வழிபாட்டுக் கொண்டாட்டங்களின்போதும் விசேடமாக செபிக்க அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

உரோமை நகரில் புனித சிற்றாலயத்தில் தினமும் இக்கருத்துகளுக்காகச் செபிக்கப்படும். விசுவாசிகள், தனிப்பட்டவர்கள், அதற்கும் மேலாக குடும்பங்கள் இந்தச் செபத்தில் ஒன்றிணையும்படி அழைக்கப்பட்டுள்ளார்கள்.

பரிசுத்த திருத்தந்தை அவர்களினால் தயாரிக்கப்பட்ட இவ்விசேட ஆயர் மன்றத்துக்காக, பரிசுத்த திருத்தந்தை அவர்களினால் தயாரிக்கப்பட்ட திருக் குடும்ப செபம் மற்றும் மன்றாட்டுகள், புரட்டாதி 28ந் திகதி ஞாயிறு மற்றும் மன்ற தினங்களிலும், திருப்பலியில் விசுவாசிகள் மன்றாட்டுகளின்போதும் செபிக்க அழைக்கப்பட்டுள்ளனர். காலை, மாலை திருப்புகழ்மாலையில் இந்த மன்றாட்டுகளைச் செபிக்கலாம். மன்றம் நிகழும் நாட்களில் திருச்செபமாலை சொல்வது வரவேற்கத் தக்கது.

**ஆயர் மன்றத்திற்காக, திருக்குடும்பத்திடம் செபம் :**

இயேசு, மரி, சூசை என்னும் திருக்குடும்பமே உங்களின் உண்மையான அன்பின் பேரொளிகளைத் தியானித்துக்கொண்டு நம்பிக்கையுடன் நாம் உம்மிடம் வருகின்றோம்.

நசரேத்தின் திருக்குடும்பமே எங்கள் குடும்பங்களும், செபத்தில் ஒன்றிணைப்பின் இடமாகவும், நற்செய்தியின் உண்மையான பாடசாலையாகவும் சிறிய குட்டித் திருச்சபையாகவும் இருப்பதாக.

நசரேத்தின் திருக்குடும்பமே வன்முறை, வெறுப்பு, பிரிவினையை குடும்பங்கள் மீண்டும் அனுபவிக்காமல் தாக்கப்பட்டவர்கள், பழிசுமத்தப்பட்டவர்கள் ஆறுதலும், குணமும் பெறுவார்களாக.

நசரேத்தின் திருக்குடும்பமே, ஆயர் மன்றக் கூட்டம் நெருங்கிவரும் வேளையில் புனிதமான குடும்பத்தில் பிளவு ஏற்படாமல் மீண்டும் இறை திட்டத்தின் அழகை உணர்ந்து நினைவுகூர்வோமாக.

**இயேசு, மரி, சூசை எங்கள் செபத்தை இரக்கமுடன் கேட்டருளும். ஆமென்.**

**நாடுகளை ஆட்சிசெய்யும் பொறுப்புள்ளவர்களுக்காக: (மௌனம்)**

குடும்பங்களில் நேரிடும் கஷ்டங்களில் ஆதரவு அளிக்கவும், இறை திட்டத்தில் சமுதாயத்தின் அடிப்படையான குடும்பத்தின் பெறுமதியை ஏற்றுக் கொள்ளும் திட்டங்களை பரிசுத்த ஆவி தூண்டவும் வேண்டுவோமாக!

**கிறிஸ்தவ குடும்பங்களுக்காக (மௌனம்)**

ஆண்டவரின் பிரசன்னத்தால் கணவன் மனைவியின் ஒன்றிப்பை உறுதிப்படுத்தி, திருக்குடும்பத்தின் முன்மாதிரிக்கேற்ப எங்கள் குடும்பங்கள் செபத்தின் கூடமாகவும் அன்பின் வாழ்வை உறுதியாகக் கொண்ட சமூகமாகவும் வாழ வேண்டுவோமாக!

**கஷ்டங்களை அனுபவிக்கும் தம்பதியருக்காக: (மௌனம்)**

இரக்கத்தின் ஆண்டவரே, திருச்சபைத் தாயின் கரிசனையும், கண்காணிப்பும், பிரசன்னமாக விளங்கும் தன்மையும், பொறுமையும் காட்டப்படவும் மன்னிப்பும், ஒப்புரவும் இவர்களின் வாழ்க்கைப் பயணத்திலே பயணிக்கவும் வேண்டுவோமாக!

**விசுவாசிகளின் மன்றாட்டு**

**குரு:** சகோதர சகோதரிகளே!

இறை குடும்பமாக ஒன்று சேர்ந்து, விசுவாசத்தினால் தூண்டப்பட்டு, எங்கள் மனங்களையும், உள்ளங்களையும் இறைவன்பால் எழுப்பி, எங்கள் குடும்பங்கள் இறை அருளால் உறுதிப்படுத்தப்படவும், உண்மையான ஒரு குட்டித் திருச்சபையாக எல்லோரும் வாழவும், இறை அன்பிற்கு சாட்சி பகருவோம்.

**பதிலுரை:** இறைவா, எங்கள் குடும்பங்களை ஆசீர்வதித்துப் புனிதப்படுத்தும்.

**எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்காக: (மௌனம்)**

அன்பினால் திருச்சபைக்குத் தலைமை தாங்க ஆண்டவர் அழைத்துள்ள அவரது பணியில் ஒன்றித்திருக்கும் ஆயர் குழாமுக்கும் சகல மக்களுக்கும் பணியாற்ற அவரை உறுதிப்படுத்த வேண்டுவோமாக.

**3வது பொதுக்கூட்டத்தில் பங்குகொள்வோருக்காக: (மௌனம்)**

ஆண்டவரின் ஆவி அவர்களின் உள்ளத்திற்கு ஒளி கொடுக்கவும், இதன்மூலம் திருச்சபை பதிலளிக்கவும் குடும்பங்கள் சந்திக்கும் சவால்களில் இறைதிட்டத்திற்குப் பிரமாணிக்கமாயிருக்கவும் வேண்டுவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**தங்களது தாய் நாட்டிலிருந்து நற்செய்திக்காக வற்புறுத்தப்பட்டு விரட்டப்பட்ட குடும்பங்களுக்காக: (மௌனம்)**

மேரியுடனும், சூசையுடனும் நாடு கடத்தலைத் தாங்கிய ஆண்டவரே, சகோதர அன்பின் பாதையைத் திறக்கவும், அவருடைய அருள் வழியாக ஆறுதல் வழங்குவதன் மூலம் மனித ஒன்றிணைப்புக் கட்டப்படவும் வேண்டுவோமாக!

**முதியவர்களுக்காக (மௌனம்)**

ஆலயத்தில், வயது முதிர்ந்தவர்களான சிமியோன், அன்னாளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டவரே, பெற்றோர்களுடன் சேர்ந்து பிள்ளைகளும் விசுவாசத்தை பிரதிபலித்து, கட்டியெழுப்ப வேண்டுவோமாக!

**பிள்ளைகளுக்காக (மௌனம்)**

வாழ்வின் ஆண்டவரே, உமது பணியில் பிள்ளைகளை வரவேற்று, இறையரசிற்கு இட்டுச் செல்லும் மாதிரிகையாகவும், கருப்பையில் அவர்களது வாழ்வுக்கு மதிப்பளிக்கத் தூண்டப்படவும் கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் பிள்ளைகள் வளர்க்கப்படவும் வேண்டுவோமாக.

**இளம் சமுதாயத்திற்காக: (மௌனம்)**

கானாவூர் திருமணத்தைப் புனிதமாக்கிய ஆண்டவரே, இறைதிட்டத்தில் திருமண வாழ்வின் அழகும், புனிதமும் குடும்பத்தில் பிளவுபடாமலிருக்கவும், திருமணத்திற்கு ஆயத்தப்படுத்துபவர்களை உறுதிப்படுத்தவும் வேண்டுவோமாக!

**முடிவுச் செபம்**

இறைவா!

உமது கைவேலையை நீர் கைவிடுவதில்லை. எமது செபத்தைக் கேளும். ஆயர் மன்றத்தின் பயணம் ஆரம்பிக்க, உமது தூய ஆவியை அனுப்பித் திருச்சபைக்கு ஒளியூட்டும். நசரேத் திருக்குடும்பத்தில் ஒளிர்ந்த உண்மையான அன்பைத் தியானிப்பதன் மூலம் சுதந்திரம், அமைச்சல் மூலம் அவள் துணிவுடனும், இரக்கத்துடனும் இன்றைய சவால்களுக்கு முகம் கொடுக்க கிறிஸ்துவின் வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

**நன்றி செபம்**


எல்லாம் வல்ல நித்திய இறைவா!

எம் அன்பின் தந்தையே, எமது தாழ்மையான செபத்திற்கும் வேண்டுதலுக்கும் செவிமடுத்து, இலங்கையின் அப்போஸ்தலரான எம் அன்பின் அருளாளர் யோசேப்வாஸ் முனிவரை எமது தாய்நாட்டின் முதலாவது புனிதராகப் பெற்றுக்கொள்வதற்கு நீர் எமக்கு அருளிய பெரும் அருளுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம்.

தந்தையே, ஒல்லாந்த வேத கலாபனையின் போது தைரியமாக தம் அயராத உழைப்பினால் அருளாளர் யோசேப்வாஸ் முனிவர் எமக்குக் காத்துத் தந்த எம் விசுவாசத்திற்காக எமது உளமார்ந்த நன்றிகளை உமக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கடந்த மூன்று நூற்றாண்டுகளாக அவரது வேண்டுதலால் ஆற்றப்பட்ட பல வியத்தகு செயல்களுக்காகவும் புதுமைகளுக்காகவும் உமக்கு நன்றி நவில்கின்றோம். எம் ஆண்டவர் இயேசுக்கிறீஸ்துவுக்கும், எம் மீட்பின் நற்செய்திக்கும், தூய ஆவியானவர் நிரம்பிய சாட்சிகளாக நாம் மாற, நமது விசுவாசத்தை ஆழப்படுத்த, நம்பிக்கையை உறுதிப்படுத்தி, அன்பைத் தூண்டி எமக்குத் துணை புரியும்.

எம் தாய் நாட்டை ஆசீர்வதியும். நிலையான சமாதானத்தையும், ஒப்புரவையும், ஒற்றுமையையும், செழிப்பையும் எம் இலங்கை அன்னைக்கும், அதன் மக்களுக்கும் வழங்கியருளும். ஆமென். ✝



இத்தாலியின் கடந்த காலப் பாசிசக் கொள்கைகளின் கீழ் சில கத்தோலிக்கர்கள் பெந்தகோஸ்து சபையினரைத் துன்புறுத்தியதற்காக, கத்தோலிக்கரின் மேய்ப்பர் என்ற முறையில் மன்னிப்புக் கேட்பதாகத் தெரிவித்தார் திருத்தந்தை. இதனை ஏற்றுக் கொண்ட பெந்தகோஸ்தே தலைவரும் கடந்த காலங்களில் தமது சபையின் நடவடிக்கைகளுக்காகத் திருத்தந்தையிடம் மன்னிப்புக்கோரினார்.

## செய்திகள்!

*ஆர்ஜென்டினா நாட்டில் வெளியிடப்படும் 'வீவா' என்ற வார இதழுக்குத் திருத்தந்தை பிரான்சிஸ் அளித்த பேட்டியொன்றில், வாழ்வில் ஒருவர் மகிழ்வைக் கொணர்வதற்குத் தேவையான பத்து அம்சங்களைக் குறிப்பிட்டார்.*



- *வாழுங்கள் வாழவிடுங்கள் என்பது*
- *மற்றவர்களிடம் தாராள மனதுடன் பழகுவது*
- *வாழ்வில் நிதானமாகச் சிந்தித்துச் செயல்படுவது*
- *தகுந்த முறையில் ஓய்வெடுப்பது*
- *சுற்றுச் சூழலைப் பேணுவது*
- *பிற மதத்தவர் மீது மதிப்பைக் காட்டுவது*
- *பிறரை வற்புறுத்தி மதமாற்றம் செய்யாமல் இருப்பது*
- *இளையோருக்குவேலை வாய்ப்பினை உருவாக்கித் தருவது*
- *இல்லங்களில் பணியாற்றுவோரை மதிப்புடன் நடத்துவது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வைர விழாக் கண்ட ஆயித்தியமலைத் திருத்தலம்

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் பிரசித்தி பெற்ற யாத்திரைத் திருத்தலமான ஆயித்தியமலை புனித சதாசகாய அன்னை திருத்தலத்தின் வைரவிழா 07.09.2014 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. அறுபது ஆண்டுகளை நிறைவு செய்யும் திருத்தலத் தின் யாத்திரிகர்களுக்கான வசதிகள் அமைக்கும் வேலைத் திட்டங்கள் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பே திட்ட மிடப்பட்டுத் திருத்தலப் பரிபாலகர் அருட்பணி டக்ளஸ் ஜேம்ஸ் அடிகளாரால் முன்னெடுக்கப்பட்டு நிறைவு பெற்றுள் ளன. புதுப்பொலிவு பெற்றுள்ள திருத்தலம் இன்று பல வசதிகளையும் உள்ளடக்கி பெருவிழாக் கண்டது.

இச் சிறப்புத் திருவிழாவின் உச்ச வழிபாட்டு நன்றித் திருப்பலியினை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. ஜோசப் பொன்னையா ஆண்டகை யுடன் இணைந்து கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்திரு இம்மானுவல் பெர்னாண்டோ ஆண்டகை ஒப்புக்கொடுத்தது விசேட நிகழ்வாகும். நாட்டின் பல பாகங்க ளிலுமிருந்து அன்னை வழியாகப் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றி கூற வழமையை விட இவ் ஆண்டு கூடுதலான பக்தர்கள் ஒன்று கூடினர்.

இலங்கையிலே சதாசகாய அன்னைக்கென அர்ப்பணிக்கப்பட்ட முதல் ஆலயம் 1954ல் ஆயித்திய மலையில் அமைக்கப்பட்டது. தாண்டவன்வெளிப் பங்குத் தந்தையாகப் பணியிலிருந்த அமரர் அருட்தந்தை ஜீ.ஈ.எல். வம்பேக் அடிகளார் இவ் ஆலயத்தை அமைத்த பெருமைக் குரியவர். போக்குவரத்து வசதிகளற்ற அக்காலகட்டத்தில் அடர்ந்த கானகப் பகுதியில் அருட்தந்தை அவர்களுடன் திருத்தல உருவாக்கத்திற்காக உழைத்த காலஞ்சென்ற வர்களான ஜே.பி.மனுவல் (பொலிஸ் பாக்கியம்), அலோசியஸ் (நீர்ப்பாசனத் திணைக்கள ஓவசியர்), தவராஜா (போஸ்ட் மாஸ்டர்), சவரிராஜா (ஆசிரியர்), மனுவல் ஆகியோர் வரலாற்றில் தவிர்க்கப்பட முடியாதவர் கள். 1950களில் ஆரம்பிக்கப்பட்ட உன்னிச்சைக் குடி யேற்றத் திட்டத்தினால் குடியேறிய கத்தோலிக்க விசுவாசிக ளின் தேவை கருதியும், 1954ம் ஆண்டை அன்னை மரியாளின் அமலோற்பவ நூற்றாண்டையொட்டி திருத் தந்தை 12ம் பத்திநாதர் வெளியிட்ட சுற்று நிருப பக்தி முயற்சிகளில் ஒன்றான யாத்திரைத் திருத்தலம் என்ற நோக்கிலும், இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. முன்னாள் ஆயர் அதி.வந். இக்னேசியஸ் கிளெனி யே.ச. ஆண்டகை அவர்களால் (1958ல்) அத்திவார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


மிடப்பட்டு அமரர். அருட்தந்தை ஜேக்கப் அலெக்சாண்டர் அடிகளாரினால் ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டது.

ஆயித்தியமலையும் அதன் அயற் பிரதேசங்களும் பாறை படர்ந்த நிலமாதலால் குடிநீர் பெறுவது கஷ்டமானது. ஆங்காங்கே ஒரு சில கிணறுகள் அமைக்கப்பட்டிருந்தாலும் அவற்றிலிருந்து உவர் நீரே பெறப்பட்டது. அன்னையின் ஆலயத்திற்கு அருகில் பக்தர்களின் குடிநீர்ப் பாவனை கருதி கிணறு தோண்டப்பட்டது. அது தொடர்ந்தும் பாறைகளாகவே இருந்ததினால் முயற்சி இடைநடுவில் கைவிடப்பட்டது. ஆயினும், முயற்சியாளர்களின் கனவில் அன்னை தொடர்ந்து கிணற்றைத் தோண்டுமாறு பணித்ததினால் நல்ல தண்ணீர் ஊற்று வெளிப்பட்டு கிணறு கட்டப்பட்டது. ஆலயப் பக்தர்களும் கிராம மக்களும் அதில் குடிநீர் பெற்று வருவதுடன், அதனை 'அற்புதக் கிணறு' என்றும் பெயர் சொல்லி அழைத்து வருகின்றனர்.

அக்காலத்தில் சதாசகாய அன்னைக்கென்று திருச்சொரூபம் எதுவும் வழக்கிலிருக்கவில்லை. ஆகவே, அருட்தந்தை வம்பேக் அடிகளார் கிழக்கிலங்கையின் பிரசித்தி பெற்ற, இந்தியாவில் ஓவியக்கலை பயின்றவரான சித்தாண்டி திரு. மாரிமுத்து கந்தையா (குமார் வைத்தியர்) அவர்களை இனங்கண்டு அன்னையின் திருவுருவப்படம் வரையும் பொறுப்பினை ஒப்படைத்தார். அவரும் தெய்வீகப் பணியை உவப்புடன் ஏற்று ஐரோப்பிய மறு மலர்ச்சிக்கால ஓவியர்களான மைக்கல்

மையால் அன்னை ஆலயத்திலேயே நிரந்தர இருப்பிடம் பெற்றாள். அழகான பிரேம் இடப்பட்டு திருப்பலிப்பீடத்தின் மேல் கனிந்த முகப் பொலிவுடன் இன்றும் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றாள் எமதன்னை.

மட்டக்களப்பு நகரிலிருந்து வவுணதீவு வழியாக 18 கிலோ மீற்றரும் செங்கலடிச் சந்தியிலிருந்து பதுளை வீதியூடாக 16 கிலோ மீற்றரும் கொண்ட தூரத்தில் ஆயித்தியமலை அமைந்துள்ளது. முற்றிலும் நெல் வயல்களைக் கொண்ட படுவான்கரைப் பிரதேசம் அன்னையின் இருப்பிடம். மத பேதங்களுக்கப்பால் அனைவரையும் தன் பிள்ளைகளாகக் காத்துவரும் அன்னை மீது இந்து மக்கள் அதிகளவு பக்தி விசுவாசம் கொண்டுள்ளனர். விஷக்கடியினால் பாதிக்கப் பட்டோர் அன்னையிடம் கையேந்தி வேண்டிக் கொண்டதனால் புதுமைகள் பெற்று காப்பாற் றப்பட்ட விவசாயிகள் அநேகர். பூச்சி பீடைகளுக்குக் கிருமி நாசினிகள் புழக்கத்தில் இல்லாத ஐம்பது அறுபதுக ளில் பயிரழிக் கும்



ஆஞ்சலோ, றபாயேல் ஆகியோரின் றொறன்டோ ஓவிய மரபுக் கலையைப் பின்பற்றிக் கச்சிதமாக வரைந்து கொடுத்தார். தாண்டவன்வெளியிலிருந்து செங்கலடி, பதுளை வீதியூடாக நடைபவனியாகத் திருவுருவம் எடுத்துச்செல்லப்பட்டது. திருவிழா முடிந்ததும் பாதுகாப்புக் காரணங்கள் கருதி திருவுருவப் படத்தை எடுத்துவர மூன்று தடவைகள் முயற்சித்த போதும் மூன்று தடவைகளும் பெருமழை பெய்து தடுத்த

பூச்சிகளில் ஒன்றை போத்தலில் இட்டு அடைத்து வந்து, வாராந்த திருப்பலிகளின் பின்னர் குருவானவரின் செப வேண்டுதல்களுடன் அதை மீண்டும் வயலில் கொண்டு விட்டபோது, பீடைகள் ஒழிந்து அமோக விளைச்சல் ஏற்பட்டதனால் விவசாயக் குடும்பங்களின் பக்தி மேலும் வளர்ந்தது. நன்றிக் கடனாக தமது விளைச்சலில் முதல் அறுவடையைக் கோயிலுக்குக் கொடுப்பதும், திருவிழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அன்னதானத்தில் தாம் பங்கெடுப்பதும் இன்று வரை தொடரும் சம்பிரதாயங்கள்.

1978 நவம்பரில் மட்டக்களப்பை சூறாவளி தாக்கப் போகும் பேராபத்தை அன்னை முன்னறிவித்த நிகழ்வை அதில் சம்பந்தப்பட்டோர் இன்றும் கண்கள் பனிக்க மெய் சிலிர்த்துக் கூறுகின்றனர். 1978 செப்ரம்பர் திருவிழாவன்று அன்னதானம் வைக்க விரித்திருந்த ஓர் ஓலைப்பாய் திடீரென சுழற்காற்றினால் கொடிமரத்தின் உச்சிக்குக் கொண்டு செல்லப் பட்டு மீண்டும் கீழே கொண்டு வரப்பட்டதை, அபாயத்தினை அன்னை முன்னறிவித்த அற்புதம் என்றே இன்றுவரை நம்புகின்றனர்.

இவ்வாறு ஏராளமான சகாயங்களை வழங்கி வரும் மாதா கோயில் கொடியேற்றத்துடன் ஆயித்தியமலை, உன்னிச்சை, பள்ளச்சேனை, மணிபுரம், நெல்லூர் போன்ற கிராம மக்கள் தமது சொந்த திருவிழா என்ற உணர்வுடன் திருத்தலம் நோக்கி வந்து நேர் கடன்கள் செலுத்துவதும், கையேந்தி வேண்டுதல் செய்வதும் காண்போர் மனதை மேலும் பக்திப்பரவசம் கொள்ளச் செய்யும் காட்சிகளாகும்.

1950–80க்கு இடைப்பட்ட மூன்று தசாப்தங்களிலும் கொழும்பு, நீர்கொழும்பு தமிழ் சிங்கள கத்தோலிக்க மக்கள் ஒரேயொரு திருத்தலமாக இருந்த சதாசகாய அன்னையின் திருத்தலம் நோக்கி, வருடாந்தம் ஆயிரக்கணக்கில் வந்து, வயற் பிரதேச சூழலில் தங்கியிருந்து, திருவிழா கண்டு சென்றனர். ஆராதனை வழிபாடுகள் தமிழ்–சிங்கள மொழிகளில் பத்து நாட்களும் நடைபெற்றன. இதனால் "சின்ன மடுத்திருத்தலம்" என்ற பெயரும் அப்போது வழக்கிலிருந்தது.



1990களில் வடகிழக்கில் உக்கிரமடைந்த உள்நாட்டுக் குழப்பங்களினால் கிராமங்கள் இடம் பெயர்ந்தன. சாதாரண சூழல் வாய்க்கப்பெறும் வருடங்களில் மட்டும் வருடாந்த திருவிழா சிறிய அளவில் நடைபெற்று வந்தது. போர் அபாயங்களிலிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு அன்னையிடம் இடைவிடாது வேண்டிவந்தனர். பாரிய இழப்புகள் தவிர்க்கப்பட்டு ஆலயத்திற்கு எவ்வித சேதமுமின்றி காப்பாற்றப் பட்டு வந்ததும் புதுமையே!

1972ல் ஆயித்தியமலை தனிப்பங்காகவும் அரச வர்த்தமானி மூலம் யாத்திரைத் தலமாகவும் பிரகடனஞ் செய்யப்பட்டது. உள்நாட்டுப் போர் முடிவுற்றதைத் தொடர்ந்து மீண்டும் அன்னையின் திருத்தலம் நாடி யாத்திரையாகவும் தூர இடங்களிலிருந்து வாகனங்கள் மூலமாகவும் ஆயிரக் கணக்கான பக்தர்கள் வருகின்றனர். அண்டி வருவோர்க் கெல்லாம் அருள்வளங்கள் அள்ளி வழங்கும் சதாசகாய அன்னையிடம் எமது நாட்டில் அமைதியான தீர்வு ஏற்பட்டு, சகல மக்களும் சுதந்திரமாகவும் ஒரேதாய் வயிற்றுப் பிள்ளைகளாகவும் வாழ வரம் அருளுமாறு கேட்டுத் தொடர்ந்து செபிப்போம்.

லூக்காஸ் அலெக்சாண்டர்



உலக அளவில் மேற்கொள்ளப்படும் சுற்றுலா நடவடிக்கைகள், சுற்றுலாத் தலங்களில் வாழும் மக்களின் பொருளாதார, சமூக மற்றும் கலாசாரங்களுக்குப் பயனளிக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டுமென்று வத்திக்கான் குடியேற்றதாரர் அவை கேட்டுக்கொண்டுள்ளது. செப்டம்பர் 27ம் திகதி கொண்டாடப்படும் உலகச் சுற்றுலா தினத்துக்கென வத்திக்கான் குடியேற்றதாரர் அவை 'சுற்றுலாவும் சமூக வளர்ச்சியும்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள செய்தியில், உலகச் சுற்றுலாக்கள் ஒருங்கிணைந்த மனித வளர்ச்சியை மையப்படுத்தியதாய் இருக்கவேண்டுமென்று கேட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## "பத்ரோ ஆதோ" உடன்படிக்கை

கீழைத்தேய படையெடுப்புகளின் கொள்கைக்கு அமைய அவர்களின் படையெடுப்புகளுக்குத் தலைமை தாங்கியவர்கள் தாம் கைப்பற்றிய கீழை நாடுகளில் திருச்சிலுவையைத் தாபிக்கும்படி பேரரசரால் பணிக்கப்பட்டார்கள். பாப்புமார்களும் பிற இறைமக்கள் மத்தியில் நற்செய்தியைப் பரப்பும் அவர்களின் ஆன்மீக வாஞ்சையைப் பாராட்டி ஊக்குவிக்கத் தவறவில்லை. பாப்பு 06ம் அலெக்சாந்தர் 1493ல் போர்த்துக்கேயருக்கும், இஸ்பானியருக்கும் கீழைத் தேசங்களில் அவர்கள் கைப்பற்றும் நாடுகளின் மேல் சகல அதிகாரமும் வழங்கி, மக்களை கத்தோலிக்க விசுவாசத்திலும், நல்லொழுக்கத்




- நில்மினி கஜேந்திரன் -

திலும் பயிற்றுவிக்கக்கூடிய நல்ல சிறந்த அனுபவமும், அறிவாற்றலுமுள்ள, கடவுள் பக்தியான ஆட்களை அங்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொண்டார். அக்காலத்தில் போர்த்துக்கேயரும், இஸ்பானியரும் கீழைத்தேசங்களில் மேற்கொண்ட படையெடுப்புகளும், மறைபரப்புப் பணிகளும் அவர்கள் உரோமைத் திருச்சபையுடன் செய்து கொண்ட ஒரு சிறப்பு உடன்படிக்கையின் அடிப்படையிலேயே நிகழ்ந்தன. இதுவே "பத்ரோ ஆதோ" அதாவது, 'அரச ஆதரவு' உடன்படிக்கையாகும். இவ்வுடன்படிக்கை இந்தியா, இலங்கை போன்ற கிழக்கு ஆசிய நாடுகளில் திருச்சபையின் ஸ்தாபகத்திலும் அதன் வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றியது. இதன் விளைவாக கீழைத்தேச நாடுகளைக் கைப்பற்றவும், அங்கு வர்த்தகம் செய்யவும் ஏகபோக உரிமை அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

இதற்குப் பதிலாக அப்புதிய நாடுகளில் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பரப்ப அவர்கள் தம்மாலான அனைத்தையும் செய்யவேண்டும். மறைபரப்புப் பணி, திருச்சபையை ஸ்தாபித்தல், மறைமாவட்டங்கள், பங்குகள், மடங்கள், பாடசாலைகள் போன்ற ஏனைய ஸ்தாபனங்களை அமைத்து நிர்வகித்தல், அவற்றிற்குத் தேவையான குருக்கள், துறவிகள், மறைபரப்பாளர்களைச் சேர்த்து அனுப்புதல், அவர்களைப் பராமரித்தல், அதற்குரிய நிதியுதவி வழங்குதல் போன்ற பொறுப்புகளை அந்நாட்டு கத்தோலிக்க அரசிடமே பாரம் கொடுத்தனர். இதற்குக் கைமாறாக ஆயர், திருச்சபையின் ஆயர், திருச்சபையின் அதிகாரிகள் போன்ற நியமனங்களுக்குத் தாம் விரும்புவோரின் பெயர்களை உரோமைக்குச் சிபார்சு செய்யும் உரிமையும் அவர்களுக்கு இருந்தது. சுருங்கக் கூறின் "பத்ரோ ஆதோ" உடன்படிக்கையானது போர்த்துக்கேய அரசருக்கு, திருநிலைப்படுத்தப்பட்ட குருக்களுக்கேயுரிய திருவருட்சாதனங்கள் வழங்கும் விடயம் தவிர்ந்த அனைத்துத் திருச்சபை அதிகாரங்களையும் வழங்கி இருந்தது. மறை பரப்பு நாடுகளில் அரசர் பாப்புவின் பிரதிநிதி போன்று செயற்பட்டார். மறைபரப்புப் பங்குகள், பணிகள், சிறந்த முறையில் செயற்படவேண்டிய ஒழுங்கு முறைகள், கட்டளைகள் அவராலேயே வழங்கப்பட்டன. அரசர்கள் மறைபரப்புப் பணியை இறைவனால் தங்களுக்கு வழங்கப்பட்டதாகக் கருதினர். பொறுப்புணர்வுடனும், நிதானத்துடனும் செயற்படுத்தினர். "பத்ரோ ஆதோ" உடன்படிக்கையினால் தாங்கள் கைப்பற்றும் நாடுகளைச் சொந்தமாக்கிக் கொள்ளவும், சூறையாடவும் தமக்குரிமை உண்டெனக் கருதினர். இவ்வாறு அரச அதிகாரத்தையும், ஆன்மீக அதிகாரத்தையும் ஒன்றுபடுத்தியதன் விளைவாகப் பல முறைகளில் கிறிஸ்தவர்கள் பிற்காலத்தில் சுதேச அரசர்கள், அதிகாரிகள், மக்களின் கோபத்திற்கும் வெறுப்புக்கும் துன்புறுத்தலுக்கும் ஆளாக வேண்டியதாயிருந்தது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஒலிம்பிக் விளையாட்டுகளின் தோற்றம்....

பகுதி - II



பண்டைய கிரேக்க நாடு பல உதாரணங்களை உலகிற்குக் கூறியும் சென்றுள்ளது. அங்கே திறமானதும் நடைமுறை சாத்திய மானதுமான ஜனநாயக அரசியலிருந்தது. ஆங்கிலத்தில் Demo என்றால் மக்களையும் Crecy என்றால் ஆட்சியையும் குறிக்கும். கிரேக்க நாடு Aristotil, Plato, Heradotus போன்ற பேரறிஞர்களை உலகிற்கு அளித்துள்ளது. அவ்வாறே Olympics விளையாட்டுக ளையும் தத்துவங்களையும், அது ஒரு விழா என்பதையும் உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளது.

தற்போதைய ஒலிம்பிக் விளையாட்டுகளில் பல்வேறு நாடுகளைச் சார்ந்த ஓட்டப் பந்தய வீரர்களின் சிறு விளையாட்டு, நீரியல் விளையாட்டு, ஓட்டப் பந்தயம் என்பன இடம்பெறுகின்றன. பண்டைய கிரேக்கத்தில் ஒலிம்பியா (Olympia) என்ற இடத்தில் விளையாடிய விளையாட்டின் நவீனமயப்படுத்தலே இன்றைய ஒலிம்பிக் விளையாட்டுகளாகும். இது ஏதென்ஸிலிருந்து சுமார் 10km தூரத்திலுள்ள ஒரு நகரமாகும். 4 ஆண்டுகளுக்கொருமுறை நடை பெறும் Olympic விளையாட்டுகள் கி.மு **776**இல் ஆரம்பிக்கப் பட்டது. ஒலிம்பியாவிலுள்ள சேயுஸ் (Zeus) என்ற தெய்வத்தின்

## பாடசாலை ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளும்

**தொடர் .... 03**

தேவாலயத்தில் பெருவிழா நடைபெற்றது. அந்தத் தெய்வத்தின் விழாவில் கவிஞர்கள், கலைஞர்கள், சிற்பிகள் கலந்துகொண்டு (Zeus) தெய்வத்திற்கு நன்றிகள், வணக்கங்கள் செலுத்தினர். நமது சரஸ்வதி பூசையில் கல்வித் தெய்வத்தை நாம் வழிபடுவது போன்று அவர்களது Zeus தெய்வத்திற்குக் கலைகளை உவந்தளித்துக் கொண்டாடினர். கலைஞர்களும் நூல்கள் யாத்தவர்களும் தம் படைப்பைக் காட்சிப்படுத்தி (Zeus) சேயுசுக்கு அளித்து தெய்வத்தை வழிபட்டனர். தாம் யாத்த கவிதைகளைப் பாடினர். ஓட்டப் பந்தயக் காரர்கள் **192** யார் தூரத்தை மையமாக வைத்து ஓட்டப் பந்த யத்தில் ஈடுபட்டனர். பின்னர் இவ்விளையாட்டுகள் பூரணச் சந்திரன் நாளில் தொடங்கி கோடை கால நடுப்பகுதியில் 5 தினங்களுக்கு நடைபெற்றன. கிரேக்கச் சித்தாந்தம் மனிதனது உடல் அவனது உள்ளத்தைப் போன்றே ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும் என்கிறது.

அருட்திரு கலாநிதி S.A.I.மத்தியு S.L.E.A.S-I



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்த விளையாட்டு விழாவின் ஆரம்பத் தினத்தில் ஒலிம்பிக் சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது. (Zeus) தெய்வத்தினது மகிமைக்காக ஊர்வலங்களும் பலிகளும் செய்யப்பட்டன. ஒலிம்பிக் விளையாட்டுகள், சத்தியப் பிரமாணம் எடுத்து 2ம் நாளில் இருந்து 4ம் நாள் முடிவடையும் வரையில் இடம்பெற்றன. இவ் விளையாட்டுகளில் காலோட்டப் பந்தயம், மல்யுத்தம், குத்துச்சண்டை, குதிரையோட்டம், ஈட்டி எறிதல், ஓட்டம், உயரம் பாய்தல், எறிதல், டிஸ்க் எறிதல், ஜவலின் எறிதல் ஆகியன இடம்பெற்றன. தேரோட்டங்களும் இடம்பெற்றன. இளைஞர்களுக்கும் வயதுவந்த மனிதர்களுக்

உலகளாவிய உரோம சாம்ராஜ்ஜியத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்தது. உரோம சாம்ராஜ்ஜியம் கி.மு 63ம் ஆண்டிலிருந்து படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு உரோமன் கத்தோலிக்க சமயமும் உலகளாவிய சமயமாக விளங்கியது.

உரோம சாம்ராஜ்ஜியம், அக்கால எகிப்து, கிரேக்கம், ஐரோப்பிய நாடுகள் ஆகிய பரந்த எல்லைகளைக் கொண்டிருந்தது. கிறிஸ்தவம் கி.பி 325ம் ஆண்டில் உத்தியோகபூர்வமாக உரோம சாம்ராஜ்ஜிய

**பொது நிலையினரின் பணிக்கென உருவாக்கப்பட்டுள்ள வத்திக்கான் அவை, திருஅவையின் இயக்கங்கள், புதிய குழுமங்கள் ஆகியவை இணைந்த, மூன்றாவது உலக மாநாட்டை 'நற்செய்தியின் மகிழ்ச்சி' என்ற தலைப்பில் நடத்தத் தீர்மானித்துள்ளன. வரும் நவம்பர் திங்கள் 22ம் நாள் முதல் 24ம் நாள் வரையும் உரோம் நகரில் இம்மாநாடு நடைபெறும்.**



கும் இடம்பெற்றது. அடிமைகள் பங்குகொள்ளவில்லை. 5ம் நாள் ஊர்வலத்திற்கும் விருந்துகளுக்கும் செலவிடப்பட்டது. ஆரம்பத்தில் விலையுயர்ந்த பொருட்கள், பரிசில்கள் கொடுக்கப்பட்டன. பின்னர் விலைகூடிய பரிசுகளுக்குப் பதிலாக தங்க முலாமிடப்பட்ட ஒலிவ் இலைகளால், வெற்றிபெற்றோர் முடி சூட்டப்பட்டனர். இவ் விளையாட்டில் பெறும் விருதுகளை விட விளையாட்டு விழாவில் பங்கு பற்றுவதையே முக்கிய கௌரவமாக வீரர்கள் கருதினர்.

கி.பி 393ம் ஆண்டில் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுப் போட்டிக்கு ஒரு தடை அல்லது அது இரத்துச் செய்யப்பட்டது.

**இதற்கான காரணங்கள் :~**

(அ) இது சேயுஸ் (Zeus) என்ற கிரேக்க தெய்வத்திற்கான வழிபாடாகும். அது

கத்தோலிக்க மதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அது உரோமன் கத்தோலிக்க சமயமென பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. இப்பிரகடனத்தைப் பண்ணியவன் கி.பி 325ம் ஆண்டில் ஆட்சிப் பீடமேறிய Constanttine மன்னன் ஆவான்.

(ஆ) அதனால் Zeus வணக்கம் தடையாக்கப்பட வேண்டும் என்ற கட்டளையைப் பிறப்பித்தவன் Theodosius என்ற உரோமைச் சக்கரவர்த்தியாவான். அவனது இப் பிரகடன அமுலாக்கம் கி.பி 393ல் இருந்து சுமார் 1500 ஆண்டு காலம் நடைமுறையில் இருந்தது.

இ) ஆனால், அது மீளவும் ஆரம்பிக்கப்பட்டதற்கான காரணகர்த்தா பிரெஞ்சு நாட்டு தலைவன் Frenchman, Baron pierre de Couberin ஆகும். அவ்வாண்டு பரிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எண்ணிப்பார்க்கையில் 10

இலட்சியங்கள் இல்லாமல் ஒருவன்
வாழ்வில் உயர்வது கடினம்.
இலட்சங்களைக் கூட
இலட்சியங்களாக்கினால்தான்
வாழ்வில் உண்மையான உயர்வைக்
கண்டுகொள்ள முடியும்!
பலருக்குத் தம் வாழ்வில் தாம்
பரிபூரணமானவர்களாக அமையவேண்டும்
என்ற இலக்கு இருக்கத்தான் செய்கிறது.
ஆனாலும் 'பரிபூரணம்' என்ற நிலையை
அடைவது ஒன்றும் சுலபமான காரியம்
அல்லவென பலரும் அறிந்துகொள்ளத்
தவறிவிடுகின்றனர்.
சீர்தூக்கி எண்ணிப்பார்க்கையில்
பரம்பொருள் தவிர்ந்த வேறெவரிலும்
பரிபூரணம் என்பது கிடையாது;
மாறாக, 'பரிபூரணம்' என்ற
இலக்கு நோக்கிய இலட்சியத்துடன்
வாழ முற்படும்போது
நிச்சயம் அதிசிறந்த நிலையை நாம்
கண்டுகொள்ள முடியும்.
அவ்வாறு கண்டு கொண்டவர்கள்தான்
மகான்களாகியிருக்கிறார்கள்!

■ அருந்தா ஏ. ஜீ. இராஜேந்திரம்



நகரில் 9 நாடுகளைச் சார்ந்த அரசத் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. பிரெஞ்சுத் தலைவன் தன் நாட்டுத் தலைநகரில் இடம் பெற்ற கூட்டத்தில் Zeus தெய்வத் திற்கான ஒலிம்பிக்ஸ் விளையாட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனும் கருத்தை வலியுறுத்தினான். அதற்கு அவன் கூறிய காரணம்:

i) கிரேக்க தெய்வத்திற்கெடுத்த விழாவை இடை நிறுத்தியமை தவறு

ii) தெய்வத்திற்கெடுக்கப்பட்ட விழா வைத் தடைசெய்தது பிழை.

iii) கிரேக்கத்தின் செல்வச் செழிப் பிற்குக் காரணம் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுகளே. அதை இல்லா மல் செய்தபடியால் கிரேக்கச் சிந்தனைகள் அழிந்தன, இதனால் அது மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனும் கருத்தை முன் வைத்தான். அம் மகாநாட்டில் கலந்துகொண்ட 9 நாடுகளும் அக்கருத்தை ஏற்றுக்கொண்டன. இதனாலேயே மீண்டும் அவ் விளையாட்டு பாரம்பரியங்களுடன் ஆரம்பிக்கப்பட்டது.




- தொடரும் ......

அழியட்டும் சிறுபான்மை மதங்கள்
உடையட்டும் கோயில்கள் சிலைகள்
வழிமட்டும் பலசேனா காட்டுஞ்சன நாயகம் (?)
வளரட்டும் 'தர்மிஷ்ட' நாட்டில்!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# தருணம் பார்த்து.....

— வீக்கேயம் —

குறுங்கதை — 09

அந்தத் தனியார் கல்வி நிலையத்திற்கு அதிபராகவிருந்த சிவஞானத்திற்கு, ஓர் அரசாங்க உயர்பதவி கிடைக்கவில்லையே என்ற மனக்குறை இரண்டு மூன்று வருடங் களாக இருக்கவே செய்தது.

அவர் மட்டுமல்ல, பட்டதாரிகள் பலரும் அரசதுறை வேலை வாய்ப்புக்காகக் காத்திருந்த காலம் அது!

'ஒரு கலைப் பட்டதாரியான நானேன் கிடைக்கும் சாதாரண கிலறிக்கல் வேலைக்குப் போகவேண்டும்'

என்ற வரட்டுக் கௌரவத்தில் — பிடிவாதத்தில் மனிதர் உறுதியாக விருந்தார். வேலை வாய்ப்போ கிடைப்ப தாகவில்லை.

ஒரு தனியார் கல்வி நிலையத் தில் *A/L* வகுப்பிற்குப் பாடமெடுத்தும், குறைந்த ஊதியமே வழங்கப்பட்டதால் அதனையும் கைவிட்டார்.

சின்ன வயதில் தகப்பனோடு விவசாயம் மேற்கொள்ளத் தோள் கொடுத்தபோதும், இப்போது அவருக்கு அதிலும் ஈடுபாடு இல்லை.

எனவேதான், தானே சிறு முதல் கொண்டு ஒரு கல்வி நிலையத்தை ஆரம்பித்தார். அதனால் வரும் ஊதியம் போதாதென்பதால் கூடவே இரு பட்டதாரி நண்பர்களையும் இணைத்துக்கொண்டார்.

தானே அதிக வகுப்புகளை எடுத்தார்.

எனினும், நண்பர்கள் இருவரும் முதல் மூன்று மாதங்களுக்கு ஊதியம் எதுவும் பெறாமல், தளபாடங்கள் அது இதுவென்று வாங்கிப்போட அனுசரணையாயிருந்தனர்.

அடுத்த காலாண்டிற்குச் சிறு ஊதியம் கொடுத்தும், அடுத்த காலாண்டில் பிள்ளை கள் சேரச் சேர ஊதியத்தையும் அதிகரித்துக் கொடுத்த நல்ல மனிதர் அவர்.

போகப் போக ஏழைப் பிள்ளைகளுக்குத் தனது வருமானத்திலிருந்து அப்பியாசக் கொப்பிகளும் வாங்கிக் கொடுத்து அரவணைத்ததால் மாணவர் வரவும் திடீரென அதிகரித்த தில் திருப்திக்கொண்டார்.

யாரையும் எளிதில் நம்பும் சுபாவம் அவரது பலவீனம். அதனைச் சரியாகப் புரிந்துகொண்ட எவனோ ஒரு மாணவன் தருணம் பார்த்து அவர் கழற்றி வைத்திருந்த கைக்கடிகாரத்தைத் திருடி விட்டதில் மனம்நொந்து போனார்.

'எவரைச் சந்தேகிப்பது....? எல்லோரையும் இதற்காகச் சங்கடப்படுத்துவது நியாயமில்லை'


என்று மனதுக்குள் குமைந்து குழம்பிப் போனார். அந்தச் சந்தர்ப்பத்தில்தான், என்றோ ஒருநாள் அவரது உறவினனான ஒரு மாணவனின் உபதேசம் அவர் புத்தியில் உறைத்தது.....

17ம் பக்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தீர்க்கதரிசனங்களின் நிலம்!




## பழமைவாத யூதர்கள்

இடிக்கப்பட்ட இரண்டு யெருசலேம் ஆலயங்களுக்குப் பதிலாக மூன்றாவது ஆலயம் எழும் வரை (பழைய ஏற்பாட்டில் இது சொல்லப்பட்டிருக்கிறது) கறுத்த ஆடைகளைக் களைய மாட்டோம் என்று, ஒருவித உன்மத்தம் கொண்டு அலையும் கூட்டமிது! கறுப்பு கோட் சூட், கறுப்புத் தொப்பி, கறுத்த சப்பாத்து, நீண்ட கன்னத்து மீசை, தாடி, மீசை என இலகுவில் அவர்களை எவரும் அடையாளங் காணலாம். தங்கள் இனம் தவிர்ந்த வேறு எவருடனும் உறவு கொள்ளாத ஒருவகைப் பற்றறுத்த நிலை., வானொலி, தொலைக்காட்சி, T.V. வலைப் பின்னல், பத்திரிகை என எதுவுமே அவர்கள் தம் வசம் வைத்திருப்பதில்லை. வேதத்தைப் படித்தல், பிள்ளைகளைப் பெறுதல் என இரண்டுந்தான் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பணி. இஸ்ரேல் அரசு அவர்களுக்கு




வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது. கொடுத்துவைத்த கட்டைகள். அங்கு சனிக்கிழமைகளில் அவர்கள் Sabath என்கிற ஓய்வினை அனுசரிக்கும் விதமே அலாதி.

## பொற்கதவு

யெருசலேமுக்குள் நுழைய ஏழு வாயில்கள். ஒவ்வொன்றும் பிரமாண்டமானவை. யெருசலேமைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள சுவர்களும் பிரமாண்டமானவை. உலக முடிவில் 'மெசியா' இவ்வழியாகத்தான் யெருசலேமுக்குள் நுழைவார் என்பது யூதர்களின் நம்பிக்கை. ஆனால், இஸ்லாமியர்கள் இதனைக் கைப்பற்றிய பின் இந்தப் 'பொற்கதவை' இழுத்து மூடிவிட்டு, அதற்கெதிரே வழி நெடுக இறந்தவர்களை அடக்கஞ் செய்து அதனைப் பின்னரொரு நிரந்தர மயானமாகவே ஆக்கிவிட்டார்கள். காரணம், மூட நம்பிக் →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



தென்கொரியாவில் நடைபெற்ற ஆறாவது ஆசிய இளையோர் மகாநாட்டுக்குத் திருத்தந்தை பிரான்சிஸ் வருகை தந்தார். அங்கு அரசுத் தலைவர்கள் பல்வேறு மதத் தலைவர்கள் எனப் பலரையும் சந்தித்த திருத்தந்தை ஆசிய ஆயர்களுடனும் உரையாடினார்.

கொரியாவில் 124 மறைசாட்சிகளை அருளாளர்களாக அறிவிப்பது திருத்தந்தையின் திருப்பயணத்தில் முக்கிய நிகழ்வாக அமைந்தது.

இது தொடர்பாக இளையோருக்கு விடுத்திருந்த செய்தியில் "ஆசிய இளைஞர்களே! எழுந்திருங்கள். மறைசாட்சிகளின் மகிமை உங்கள் மேல் ஒளிர்கின்றது" எனத் திருத்தந்தை கூறியிருந்தார்.

**அருளாளர் யோசப்வாஸ் ....**

முற்றுப்பெறுவதில்லை. விதைக்கப்பட்ட நம்பிக்கை தொடர்ந்து வளர ஊக்கமும் ஆக்கமும் அளிப்பது அவசியமாகின்றது. அவ்வகையில் அருளாளர் ஜோசப்வாஸ் நமக்கெல்லாம் ஒரு முன்மாதிரி. பிரச்சினை நிறைந்த சூழலில் அவரது மறைக்கல்விப் பணி பற்றிய சிந்தனை நம்முடைய இக்கால மறைக்கல்விப் பணிக்கு மாபெரும் ஊக்கம் தரும் என்பதில் சிறிதளவு சந்தேகமும் இல்லை. எனவே, அவர் வழியைப் பின்பற்றி எத்தகைய எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், எத்தகைய சூழலிலும் இயேசுவின் நற்செய்தியை அறிவித்து, புதிய கிறிஸ்தவ சமூகங்களைக் கட்டியெழுப்புவோம்.

→ கையின்பாற்பட்டது. அது வேறொன்றுமல்ல, தீட்டுப்பட்ட இடங்களைத் தாண்டி மெசியா செல்லமாட்டார். எனவே, பொற்கதவுப் பிரதேசத்தைத் தீட்டுள்ள இடமாய் ஆக்கிவிட்டதாய்ச் சொன்னார்கள். இன்னுமது அவ்வாறுதானிருக்கிறது. கடவுளுக்கே கதவை மூடிய ஒரே இடம் யெருசலேம்தான்.

## அழுகையின் சுவர்

யூதத்தில் இதற்கு 'மேற்குச் சுவர்' என்று பெயர். அழுகையென்றால் சாதாரண அழுகையல்ல.... இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்தும் ஆற்றவொண்ணாத் துயரின் அழுகை. சொலமோன் அரசனால் கட்டப்பட்டு அழிக்கப்பட்ட முதலாவது யெருசலேம் ஆலயத்தில் எஞ்சியிருக்கும் ஒரேயொரு பாரிய சுவர் அது. 'அல் அக்சா' மசூதியின் ஒரு பக்கச் சுவராக இருக்கும். இதில் யூதர்கள் முட்டி முட்டி அழுவதையும், மார்பில் அறைந்தறைந்து பிரார்த்தனைகளில் ஈடுபடுவதையும் காணச் சங்கடமாயிருக்கும். பெண்களுக்கு அங்கு அனுமதியில்லை.

- தொடரும் ....

**- தருணம் பார்த்து தொடர் .....**

அவன் சொன்னான்ஹ

"மாஸ்டர் ..... நீங்கள் எல்லாரையும் நம்பி அளவுக்கு மிஞ்சிய சுதந்திரம் கொடுக்கிறியள்... அதன் பின்விளைவுகளை ஒருநாள் அனுபவிக்கவேண்டி வரும்..... அப்போதாவது என்னை நினைவு கூருங்கள்....!"

அவன் இப்போது உயிருடன் இல்லையே என்று நினைத்தபோது என்றுமில்லாதவாறு அவர் கண்கள் பனித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




எல்லாக் காலத்திலும் எப்போதும் கிடைக்கக் கூடிய ஒரு பழம் வாழைப்பழம். இதனை முக்கனிகளுள் ஒன்றாகக் குறிப்பிடுவர்.

விற்றமின் A, B1, B2, C ஆகிய உயிர்ச் சத்துகளுடன் சுண்ணாம்புச் சத்தும் அதிகளவு வாழைப்பழத்தில் உள்ளதால் இது பல நோய் களைக் குணமாக்கக்கூடியதாய் உள்ளது.

வாழைப்பழம் மட்டுமல்ல வாழையின் அனைத்துப் பகுதிகளுமே - வாழைக் கிழங்கு, வாழைத் தண்டு, வாழைப்பட்டை, வாழைக் காய், வாழைப் பூ, வாழை இலை அனைத் துமே மருத்துவ குணம் கொண்டவை என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

பொதுவாக வாழைப்பழம் உடலுக்கு வலுவையும், எடையையும் அளிக்கக்கூடியது. உணவை எளிதில் சீரணமாக்கக்கூடியது. பித்தத் தைப் போக்கும், இரத்த ஓட்டத்தை விருத்தி செய்யும், மலச் சிக்கல் இருந்தாலும் போக்கி விடும்.

முட்டுவலி, முழங்கால் வீக்கம் உள்ள வர்கள் தொடர்ந்து மூன்று நான்கு நாட்க ளுக்கு வாழைப்பழத்தை உணவாக உட் கொண்டால் நோய் குணப்படும்.

ஆனால், ஒரு நாளைக்கு 8 அல்லது 9 வாழைப்பழங்களை மட்டுமே நோயாளி உண்ண வேண்டும்.

சிறுநீரகக் கற்கள் இன்று பல ரையும் தொல்லைப்படுத்து கின்றன. சிறுநீர்க் கற்கள் உரு வாவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. சிறுநீரகத்தில் உருவாகும் கற்களால் வலி, வேதனை, சிறுநீரில் இரத்தம், சிறுநீரகம் பழுது படவும் இவை காரணமாகலாம்.

சிறுநீரகக் கற்களை அகற்றுவதில் வாழைத்தண்டு மிகவும் முக்கியமானது. வாழைத் தண்டின் சாறெடுத்துக் குடிக்கலாம். வாழைத் தண்டை சுண்டல் செய்து உண்ணலாம். வாழைத் தண்டின் மேல் தோலை சீவிவிட்டு அதனை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி மோரில் ஊறவைத்து வற்றலாகக் காயவைத்து எண்ணெயில் பொரித்து வைத்துக்கொண்டு வெறும் வாயில் தேவையான அளவு உண்டு வந்தால் சிறுநீர்க் கற்கள் படிப்படியாகக் கரைந்து அகன்றுவிடும்.

வாழை இலையில் சாப்பிடுவது, வாழை இலையை அவித்து ஆறிய நீரில் குளிப்பது எல்லாம் நமது முன்னோர்கள் கடைப்பிடித்த ஆரோக்கியமான பழக்கங்கள். ஆனால், நாம் வாழை இலையையும், பிளாஸ் டிக் மயமாக்கி ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்கின்றோம்.

- ஆனந்த சித்தன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# வரலாற்றில் மனித உரிமைகள்

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் (சபை) கவுன்சில் என்றால் என்ன?**

ஐக்கிய நாடுகள் தாபனம், நாம் முன்னம் இக் கட்டுரைத் தொடரில் கண்டவாறு, 1948ஆம் ஆண்டில் மனித உரிமைகள் பிரகடனத்தை நிறைவேற்றிய பின்னர் அதையிட்டு கவனம் செலுத்த உரிய ஆணைக்குழுவைத் தொடர்ந்து செயற்படுத்தியது. அது தொடங்கப்பட்ட 1946 இலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை செயற்பட்டுக்கொண்டு வந்தது. அது ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக கவுன்சிலின் (E and Social Council – ECOSOC) ஒரு பாகமாகவே அமைந்தது. 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றின் பேரில் இந்த ஆணைக் குழுவானது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்சில் (UN Human Right Council – UNHRC) என்ற அமைப்பினால் பிரதியீடு பண்ணப்பட்டது. 1947 முதல் 1967 வரை, இருந்த ஆணைக் குழுவானது, நாடுகளின் இறைமையில் தலையிடாத கொள்கையைக் கடைப் பிடித்து வந்தது. இந்தக் காலகட்டத்தில் மனித உரிமைகள் விடயத்தில், அதன் அமுலாக்கத்தில் உதவி தேவைப்படும் நாடுகளுக்கு உதவுவதையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வந்தது. மனித உரிமைகள் மீறல் தொடர்பாக விசாரிக்கவோ, அத்தகைய மீறலில் ஈடுபட்டவர்களைக் கண்டிக்கவோ அது முனையவில்லை.

ஆனால், 1967 இல் அது 'தலையீடு' செய்யும் முடிவுக்கு வந்தது. விசேடமாக, ஆபிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளின் அன்றைய சூழ்நிலை கருதி, குறிப்பாக தென் ஆபிரிக்க சிறுபான்மை வெள்ளையினத்தவரின் இன வெறி ஆட்சியின் கொடுமைகளின் காரணமாக என்று கூடச் சொல்லமுடியும்,- இந்த முடிவை அது எடுத்தது. இதையடுத்து மனித உரிமை மீறல் ஏற்படும் வேளைகளில் அந்தந்த நாட்டில் விசாரணைகளை நடத்தவும், அது குறித்து அறிக்கை சமர்ப்பிக்கவுமான அதிகாரத்தை அது பெற்றுக்கொண்டது.

இந்த மாதிரியான பொறுப்பினை பயனுள்ள வகையில் மேற்கொள்ள 1976 ஆம் ஆண்டில் பிராந்திய ரீதியில் செயற்படக்கூடிய உப குழுக்களை அது உருவாக்கியது. குறித்த வகையான மீறல் குறித்துக் கவனிக்க ஒரு குழு என்ற வகையில் (உதாரணமாக பெண்களுக்கெதிரான வன்முறை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கள், கடத்தல்கள், தடுத்து வைத்தல்கள் என்ற வகையில் ஏற்கப்படும் முறையீடுகளுக்கேற்ப) தனித் தனியே உப குழுக்கள் செயற்பட்டன. இவை ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பாளர்களாக நாடுகளில் செயற்பட்டமை கொஞ்சம் பயனுள்ளதாக அமைந்தி ருந்தாலும், UNHCR போன்ற அமைப்புகள், மனித உரிமை ஆர்வலர்களாலும், செயற்பாட்டாளர்களாலும், ஏன் அரசாங்கங்களாலும் கூட வெறுக்கப்பட்டதை மறுப்பதற்கில்லை. குறிப்பாக நமது நாட்டில், அரசாங்க நெருக்கடிக்குப் பணிந்து போர் உச்சக்கட்டத்தில் இருந்தபோது, வன்னி மக்கள் கதறியழுததைக் கூட கணக்கிலெடுக்காமல் அலுவலகங்களை மூடிக் கொண்டு தமது ஊழியர் சகிதம் புறப்பட்டுச் சென்றதை அதன் முரண் நடத்தைக்கும், மக்கள் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டதற்கும் உதார ணமாக இங்கு சொல்லமுடியும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 2006 ஆம் ஆண்டு மார்ச் 27ந் திகதி தனது கடைசி அமர்வுடன் முடிவுக்கு வந்தது. அது வரை அது பிராந்தியங்களில் மனித உரிமைகள் தொடர்பாகப் பரீட்சிக்கவும், மேற்பார்வையிடவும், பகிரங்க அறிக்கை வெளியிடவும் அதிகாரம் கொண்டிருந்து. அதில் ஐக்கிய நாடுகள் தாபனத்தில் அங்கம் வகிக்கும் ஐம்பத்தி மூன்று நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகளை ECOSOC தெரிவுசெய்தது. யாருக்கும் நிரந்தர அங்கத் துவம் கிடையாது. பிரதி வருடமும் அநேகமாக மே மாதத்தில் இதில் மூன்றில் ஒரு பங்கு ஆசனங்க ளுக்காக தேர்தல் அல்லது தெரிவு இடம்பெறும். அங்கத்துவம் மூன்று கால வரையறை கொண்ட தாகவே அமையும்.

தனது செயற்காலத்துக்குள் பல ஏற்றத் தாழ்வுகளை, விமரிசனங்களை, வெளிநடப்புகளை, முறையற்ற தெரிவுகளை எல்லாம் ஆணைக்குழு கண்டது. இருப்பினும்,

**1978** இல் சிறுபான்மையினருக்கெதிரான நட வடிக்கைகளை கண்காணிக்கவும்,
**1992** இல் இனச் சுத்திகரிப்பிற்கெதிராகவும்,
**1994** இல் இனப்படுகொலைகளுக்கெதிராகவும் சில முக்கிய முடிவுகளை மேற்கொண்டதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது அவசியமாகும்.

தற்போது செயற்படுகின்ற மனித உரிமை கள் சபையில் 47 அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதி களே இருக்கின்றார்கள். நேரடி மற்றும் இரகசிய வாக்கெடுப்புகள் மூலம் இந்தப் பிரதிநிதிகள் பொதுச் சபையில் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படுவார்கள். பொதுவாக அங்கத்துவம் பெறும் நாடுகள் தமது நாட்டு மனித உரிமைகள் மேம்பாடு மற்றும் கடைப்பிடித்தல் தொடர்பாக ஆற்றிவரும் பங்களிப்பு மற்றும் சபையின் செயற்பாடுகளில் முன் வந்து அளிக்கும் நிதிபோன்ற ஆதரவின் பொருட்டும் தெரிவுசெய்யப்படுவதுண்டு. அங்கத்துவம் பிராந்திய அடிப்படையில் அமைகின்றது. இதனடிப்படையில்,

ஆபிரிக்க நாடுகளிலிருந்து – 13 அங்கத்துவம்
ஆசியா – பசுபிக் பிராந்தியத்திலிருந்து – 13 அங்கத்துவம்
இலத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் நாடுகளி லிருந்து – 8 அங்கத்துவம்
மேற்கு ஐரோப்பா மற்றும் ஏனைய நாடுகளிலிருந்து – 7 அங்கத்துவம்
கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து – 6 அங்கத்து வம் ஆக, 47 நாடுகள் அங்கத்துவம் பெறுகின்றன.

இவை மூன்று வருட காலத்திற்குச் செல்லுபடியாகும். இருப்பினும் இரண்டு தடவைகள் தொடர்ந்து தெரிவுசெய்யப்பட முடியும். ஆனால் உடனடியாக மூன்றாம் தடவைக்கு வாய்ப்பு வழங்கப் பட மாட்டாது. இன்னுமொரு மூன்றாண்டு கால இடைவெளியின் பின்னரே போட்டியிட முடியும்.

இந்த மனித உரிமைகள் சபையில் ஒரு தலைவர், மற்றும் அவர் சார்ந்திராத பிராந்தியத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் நான்கு உப தலைவர்கள் அமைவார்கள். ஒரு வருட காலத்திற்கே இந்தப் பதவிகள் இருக்கும். அதுவும் சபையின் வருட வட்டத்திற்களவாகவே இருக்கும் என்பது குறிப்பிடத் தக்கது.

தற்போது பின்வரும் காலகட்டத்தில் முடி வடையும்படியாக நாடுகளின் அங்கத்துவம் இந்தச் சபையில் அமைகிறது:

| | | | |
|---|---|---|---|
| அங்கோலா – | 2013 | ஆர்ஜன்ரீனா – | 2015 |
| அவுஸ்திரியா – | 2014 | பெனின் - | 2014 |
| பொஸ்ஸட்வானா - | 2014 | பிரேசில் - | 2015 |
| பேர்க்கினா ப:சோ- | 2015 | சிலி - | 2014 |
| கொங்கோ - | 2014 | கோஸ்டா ரிக்கா - | 2014 |
| ஐவரி - | 2015 | செக் குடியரசு - | 2014 |
| ஈக்குவேடோர்- | 2013 | எஸ்டோனியா - | 2015 |
| எத்தியோப்பியா - | 2015 | கபொன் - | 2015 |
| ஜேர்மனி - | 2015 | குவாத்தமாலா - | 2013 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | |
|---|---|---|
| இந்தியா - 2014 | இந்தோனேஷியா - 2014 | அயர்லாந்து - 2015 |
| இத்தாலி - 2014 | ஜப்பான் - 2015 | கஜகிஸ்தான் - 2015 |
| கென்யா - 2015 | குவைத் - 2014 | லிபியா - 2013 (இதன் அங்கத்துவம் அங்கு |

நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரினால் 01.03.2011 இல் இடைநிறுத்தப்பட்டு 18.11.2011 மீள அனுமதிக் கப்பட்டது)

| | | |
|---|---|---|
| மலேஷியா - 2013 | மாலைதீவு - 2013 | மொரித்தானியா - 2013 |
| மொன்டெனெகுரோ - 2015 | பாகிஸ்தான் - 2015 | பெரு - 2014 |
| பிலிப்பைன்ஸ் - 2014 | போலாந்து - 2013 | கட்டார் - 2013 |
| கொரிய குடியரசு - 2015 | மோல்டோவா குடியரசு 2013 | ரோமானியா - 2014 |
| சியரா லியொன் - 2015 | ஸ்பெயின் - 2013 | சுவிட்ஸலாந்து - 2013 |
| தாய்லாந்து - 2013 | உகாண்டா - 2013 | ஐக்கிய அரபு நாடுகள் -2015 |
| அமெரிக்கா - 2015 | வெனிசுவேலா - 2015 | |

12.11.2013 அன்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை 2013 ஆம் ஆண்டுடன் அங்கத்துவத்தை இழக்கின்ற 14 நாடுகளுக்குப் பதிலாக இன்னும் புதிய 14 நாடுகளைத் தெரிவுசெய்துள்ளது.

**அவை:-**

சீனா, ரஷ்யா, சவுதி அரேபியா, கியூபா, வியட்னாம், அல்ஜீரியா, பிரிட்டன், பிரான்ஸ், மோல்டிவ்ஸ், மசிடோனியா, மெக்ஸிக்கோ, மொராக்கோ, நமீபியா மற்றும் தென் ஆபிரிக்கா ஆகும்.

எனவே, மேற்கத்திய மனித உரிமை ஆர்வலர்கள், தம் நாட்டின் மனித உரிமை மீறல் குறித்து தக்க விசாரணை நடாத்த ஐக்கிய நாடுகள் குழுவை அனுமதிக்காத சீனா, சவுதி- அரேபியா, ரஷ்யா போன்ற நாடுகளுக்கு அங்கத்துவம் வழங்கியமை தொடர்பில் கடும் அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

அதே சமயம் ஜெனிவாவில் நிலைகொண்டுள்ள மனித உரிமைகள் கவுன்சில் தனது செயற்பாடுகள் குறித்து (உதாரணமாக மனித உரிமை மீறல் தொடர்பில் விசாரணைக்குரியதாகத் தெரிவு செய்யும் நாடுகள்) கண்டனங்களுக்குள்ளாகாமலில்லை. இருப்பினும் மேற்சொன்ன 47 நாடுகளே இவ்வருடம் இந்தக் கவுன்சிலில் அங்கத்துவம் வகிக்கப் போகின்றன. இந்தப் பட்டியலைக்கொண்டு இலங்கையின் போக்குப் புரிகிறதல்லவா. அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் தம் செல்வாக்கைக் கொண்டு தமக்கு நட்பான நாட்டுக்கு ஆதரவு காட்டும்படியாக மற்றைய அங்கத்துவ நாடுகளை ஏற்பாடு செய்யமுடியும். இந்த வகையில், இதுகாறும் இந்தியாவின் செயற்பாடு தொடர்பில் எம்மால் விளங்கிக்கொள்ள முடியும்.

முடிவாக, நாம் ஒவ்வொருவரும் இதுவரை கண்ட விபரங்களை, குறிப்பாக மனித உரிமைகள் தொடர்பானவை பற்றி அறிந்திருக்கவும், அதற்கெதிரான மீறல் சம்பவங்கள் தொடர்பில் விழிப்போடிருக்கவும், அப்படியான மீறல்களுக்கெதிராகக் குரல் கொடுக்கவும் முன்வராது போனால். நாளை நமக்காகக் குரல் தர யாரும் முன்வராத சந்தர்ப்பங்கள் நிறைய ஏற்படக்கூடும்.

நம் நாட்டில் இனங்களுக்கிடையில் நல்ல உறவுகள் இல்லை. சிறுபான்மையே சிறுபான்மையை (நிலம், தொகை, தொழில், மற்றும் ஏனைய வாய்ப்புகளில்) விழுங்க முயலும் நிலை. நியாயங்கள் கிட்டும் நேரத்தில் அதைத் தடுப்பதில் பெரும்பான்மைக்கு விசுவாசமாகச் செயற்படும் தன்மை. நக்குண்டு நாவிழந்து நிற்கின்றது மட்டுமல்ல, செய்வினை தன்னால் கட்டுமீற முடியாமல் சொன்னவற்றைச் செய்யும் ஏவல் நிலை. தலைக்கனம் தலைமேலேறி விட்ட நிலையில் அடுத்தவர் மத நம்பிக்கைகளை இழிவுசெய்யும் தன்மை. ஒரே தேசம் ஒரே குரல் என்ற வகையில் சாம பேத தான தண்ட முறைகள் கொண்டு எதிர்ப்புகளை நசுக்குகின்ற முயற்சிகள் என்று அடுக்கிக் கொண்டே போகமுடியும். தனி மனித பேர், புகழ், சொத்து, அதிகாரம், குடும்ப ஆதிக்கம் என்பவற்றுக்காக மக்கள் மீது சுமைகள் அதிகரிக்கின்ற பொருளாதார அடிமை நிலை. அமைதியான முறையில், இழந்த தம் உறவுகள் தொடர்பில் கவன ஈர்ப்புகளைத்தானும் செய்யமுடியாத அராஜகச் சூழல், ராஜதந்திர சித்து விளையாட்டுகளால் நாடே ஆபத்தில் சிக்குகின்ற சூழல்.

இலங்கையின் ஆயர் பேரவை இன்று துணிந்து நீதிக்காகக் குரல்தர முன்வந்த சூழ்நிலையில் நாளை அவர்கள் மேல் என்ன முத்திரை குத்தப்படுமோ தெரியவில்லை.


எனவே இத்தகையதோர் சூழ்நிலையில் இந்த வருடத்தை மனித உரிமையின்பால் ஒரு கவனயீர்ப்பு ஆண்டாக மட்டக்களப்பு மறைமாவட்டம் பிரகடனப்படுத்தியிருப்பது காலத்திற்கேற்ற - வரவேற்கத்தக்க - ஒரு விடயம் என்பதில் ஐயமேயில்லை.

~ முற்றும் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திரை விமர்சனம்




பத்திரிகைகளிலும், தொலைக் காட்சிகளிலும் செய்திகளாக அறிந்த விஷயங் களை வைத்துக்கொண்டு, விறுவிறுப்பான திரைக்கதையோடு, சுவாரஷ்யமான காட்சிக ளின் மூலம் இந்த 'சதுரங்கவேட்டை' உருவாக் கப்பட்டுள்ளது. படம் ஆரம்பித்த சில நிமிடங்க ளில் கதையின் ஓட்டத்தைக் கணித்து விட முடிகிறது. ஆனால் நடராஜ் எப்படி ஏமாற்று கிறார் என்பதுதான் ட்விஸ்ட்.

நெத்தியில நாமம் போடவென்றே திரிகிற கூட்டம் ஒன்று, உங்களுக்குப் பக்கத் திலேயே இருக்கலாம். 'பாக்கெட் கவனம்' என்பதுதான் இந்தப் படத்தின் செய்தி!

இது ஏமாறுகிறவன் தப்பா? ஏமாற்றுகிறவனின் சாமர்த்தியமா? என்ப தெல்லாம் காதுக்குப் பின்னாலிருக்கும் 'கருத்து'.

அதிலும் ஹீரோ பேசுகிற ஒவ்வொரு வசனமும் நச் நச். 'நான் உங்களை ஏமாத்தல. ஏமாற்றதுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்திருக்கேன்' 'நல்லவனா இருந்தா செத்தபிறகு சொர்க்கத்துக்குப் போகலாம். கெட்ட வனாயிருந்தா வாழும் போதே சொர்க்கத்தைப் பார்க்கலாம்' என்கிற அளவுக்கு இந்தப் படத்தில் திருட்டுத் தனத்துக்கு லைசென்ஸ் தருகிறார் இயக்குனர்.

பாத்ரூம் பக்கெட்டில் தண்ணீர் பிடித்து அதை பாட்டிலில் அடைத்து, 'இது அமெரிக்காவிலிருக்கிற ஏரியில் பிடித்து இம்போர்ட் செய்யப்பட்ட தண்ணீர். இதில் ஒருசொட்டு கலந்து தினந்தோறும் குடித்தால் கேன்சர் வராது. கைகால் நடுங்காது. தன்னம்பிக்கை வளரும்' என்றெல்லாம் விற்கிறார் ஹீரோ. அதற்கப்புறம் எம்.எல்.எம் பிசினஸ், ஈமு கோழி பிசினஸ் என்று நாட்டில் பித்து பிடித்துத் திரியும் அத்தனை பணத்தாசைக் காரர்களையும் பந்தாடுகிறது நிஜம். அதிலும் பூட்டிக்கிடக்கிற ஒரு நகைக்கடையை வைத்து ஹீரோ நட்டி செய்யும் ஒரு மேஜிக், கற்பனைக்கும் எட்டாத கலகலப்பு. மக்கள் அப்படித்தானே பறக்கி றார்கள் பணத்திற்கும் இலவசத்திற்கும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்படிப்பட்ட திருட்டு வேலைகளின் தலைவனான நட்டி எப்படி நல்லவரா



கிறார்? அவரை அந்தக் கட்டத்திற்குக் கொண்டு செல்லும் சம்பவம் எது? என்பதையெல்லாம் அழகாக விவரிக்கிறது கதை. இந்தப் படத்தின் ஒவ்வொரு வசனங்களும், காட்சியும் நிழல் அல்ல, நீதிப் போதனையாக அமைந்துள்ளது.

குற்றவாளியான நட்டி, போலீசிடம் மாட்டிய பின்பு கதை இன்னும் பரபர...! 'பணம்– அச்சடிக்கப்பட்ட ஆயுதம்' என்பன போன்ற பலபல சிறிய கதைகள் விரிவதும் தமிழ்ச் சினிமா திரைக் கதையில் புதிய அத்தியாயம். அதுமட்டுமல்ல, ஒரு திருட்டுக்குப் பின்னால் இருப்பது வெறும் திருட்டு மட்டுமல்ல, அதற்கான கடினத்தனம் என்பதையும் அவ்வளவு அழகாகக் காட்டுகிறார் இயக்குனர் வினோத்!

இதற்கு முந்தைய படங்களைப் பார்த்த வர்கள் 'நட்டியெல்லாம் ஏன் நடிக்கவரனும்? 'என்று யோசித்திருக்கலாம். இந்தப் படத்தில் அப்படியொரு பொருத்தம் அவரிடம். அதுவும் அவர் பேசும் பேச்சும், அதற்கு அவரது கம்பீரமான குரலும் ஓர் ஈர்ப்பு என்றால், ஏமாற்றுகிற புண்ணி யவான்களுக்கே உரிய பாடிலாங்குவேஜ் அஷ்ட பொருத்தமாக நுழைந்து கொள்கிறது அவரது நடை உடை பாவனையில்! 'எல்லாரையும் தோற்க டிச்சுட்டேண்டா' என்கிற தொனியோடு அவர் கோர்ட்டிலிருந்து வெளியேறுகிற காட்சி ஒன்று போதும் உதாரணத்திற்கு!

முழுப் படத்திற்கும் தேவையில்லைதான் இஷாரா. ஆனால் நடுநடுவே வந்தாலும் நடிப்பிலும் தோற்றத்திலும் 'நிறைந்து' காணப்படு கிறார். அவரது சொந்தக் குரல் ஓர் இனம் புரியாத ப்ளஸ்சும் கூட! 'இது ரொம்ப சின்ன உலகம். அன்பை மற்றவங்களுக்குக் கொடுப்பதும், மற்றவங்ககிட்ட யிருந்து வாங்கறதும்தானே வாழ்க்கை' என்கிற வசனத்தை அவர் குரலில் கேட்கவேண்டும். அடேயப்பா... அதில் ஏதோ ஓர் இனம் புரியாத சோகமும் இழையோடுகிறது.

வெ. ரமணன்

நம்பமுடியாவிட்டாலும், இளவரசுவைப்போல முட்டாள்களும் இருப்பதால்தானே திருடர்கள் பிழைப்பு ஓடுகிறது. அதுவும் பாம்புக்கு 200 பாஷை தெரியும் என்பதை நம்புவதும், யாராவது பேசுவதைக் கேட்டால் பாம்புக்கு உடல் இளைக்கும் என்பதால் மௌனவிரதம் இருப்பதுமாக ஒரே கலவரம்தான். 'பாம்புன்னு சொல்லாதீங்க செட்டியார். வேணும்னா அதுக்கு இளைய தளபதி விஜய்னு பேரு வச்சுக்கலாமா?' என்று பட்டையக் கிளப்புகிறார் நட்டி.

சுத்தத் தமிழில் பேசுகிற வில்லன், இஷாராவை பிரசவ ஆஸ்பத்திரியில் சேர்க்க அல்லாடும் மற்றொரு ரவுடி என்று வித்தியாசமான கதாபாத்திரங்களால் ரசிக்கவும் பதறவும் வைக்கிறார் இயக்குனர்.

பின்னணி இசையில் முழு சதம் அடித்திருக்கும் இசையமைப்பாளர் சீன் ரோல்டன், பாடல்களில் படு பயங்கர மாகச் சறுக்கியிருக்கிறார். ஒரு பாடல் கூட மனதில் நிற்கவில் லையே? ஏற்கனவே ஸ்லோவானபாடல்கள், இதில் படம் முடிகிற நேரத்தில் ஒரு பாடலைப் போட்டு பயங்கரமாக வெறுப் பேற்றுகிறார் டைரக்டர்.

நீதிமன்றக் காட்சிகளில் நடுநடுவே வந்துபோகும் நட்டி அன் கோவின் ஏமாற்றுக் காட்சிகள் எடிட்டர் ராஜா சேதுபதிக்கு ஒரு சபாஷ் போட வைக்கிறது. நட்டி ஒளிந்து கொள்ளத் தேர்ந்தெடுக்கும் அந்தக் கிராமத்தையும் அந்த அழகான குடிசையையும் மட்டுமல்ல, பல காட்சிகளில் காரண காரியத்தோடு வைக்கப்பட்டிருக்கும் டாப் ஆங்கிள் ஷாட்டும் ஒளிப்பதிவாளர் கே.ஜி.வெங்கடேஷின் திறமைக்கு சபாஷ் போடச்சொல்கிறது.

தற்போது இந்தியாவில் சிறந்த ஏமாற்று வேலை யாக ஓடிக் கொண்டிருப்பது 'ரைஸ் புல்லிங்' என்பதுதான். இந்தப் படத்தில் காட்டப்படும் எல்லா ஏமாற்று வேலைகளும் தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளில் இப்போதும் நடந்து கொண்டேதான் இருக்கிறது. ஊர் ஊராக மைக் வைத்துச் சொல்ல வேண்டிய ஒரு விஷயத்தை அசர வைக்கும் திரைக் கதையுடன் மிரளவைக்கும் சம்பவங்களுடன் சொல்லியிருக் கிறார் இயக்குனர். அந்தவகையில் மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியிருக்கும் இந்த அறிமுக இயக்குனர் எச்.வினோத் துக்கு முழுமையான பாராட்டுகள். அவரது துல்லியமான வசனங்களுக்கும் ஒரு தனி இடம் தான்.

அடுத்தவனிடம் ஏமாந்த ஒவ்வொரு தமிழனும் ஒரு முறை பார்த்தாலே கூடபோதும். இந்தச் 'சதுரங்கவேட்டை' தயாரிப்பாளருக்குத் தங்கவேட்டைதான்! ■ ■ ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புலமைப் பிசாசு

**2014** ஆகஸ்ட் 17ந் திகதி காலை: அப்பிரபலக் கல்லூரியின் வெளிவாசலுக்கு முன்னால் நிறையப் பெற்றோர்கள்: அன்று ஞாயிற்றுக்கிழமையும் கூட.....

'என்ன ஆர்ப்பாட்டம் நடக்குதோ தெரியல.....' என்று மனதுக்குள் எண்ணியவாறு அன்ரன் அவ்விடத்தில் உந்துருளியைச் சற்று நிறுத்திவிட்டு விசாரித்தார்.

கல்லூரியின் உள்ளே ஐந்தாம் வகுப்புப் பிள்ளைகள் புலமைப் பரிசில் பரீட்சை எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்றும், வெளியே பெற்றார்கள் காத்திருக்கிறார்கள் என்றும் அன்ரன் அறிந்துகொண்டார். சற்று எல்லோரை யும் அவதானித்தார்.

ஒரு தாய், இன்னொரு தாயிடம் சொன்னார்:

"என்ர மகன் எப்புடியும் 190க்கு மேல் எடுப்பான்...."

மற்றய தாய் சொன்னார்:

"என்டவனும் நல்லாப் பாஸ் பண்ணு வான். ஆனா சீதாட மகனப் பார்க்க குறைய எடுத்தானன்டா, மகன்ட முதுகுத் தோல உரிப்பன் எண்டு சொல்லியிருக்கன், சீதாட மூக்கும் உடைபடும்....."

அன்ரன், 'இது பிள்ளைகளுக்கிடை யிலான பலப்பரீட்சை.....' என்று எண்ணிக்கொண்டார்.

உள்ளே, முதலாவது வினாத்தாள் முடிந்து அடுத்த வினாத்தாள் தொடங்குவதற்கான இடை வேளை...

அந்த இரண்டு தாய்மாரின் மகன்மாரும் சீதாவின் மகனும் குளிர்பானத்தைப் பகிர்ந்து குடித்துக்கொண்டிருந்தனர்.

"இன்னும் ஒரு மணித்தியாலத்தால நாம free birds"

மற்றயவன் சொன்னான்:


"டேய் அம்மாவ நினைச்சா பயமாயி ருக்கு...."

அடுத்தவன் சொன்னான்:

"நீ பயமில்லாமக் கேள்றா ..... அவ கொலர்சிப் பாஸ் பண்ணினாவா எண்டு.... நம்மளப் போட்டு என்ன பாடுபடுத்திப்போட்டாங்க .... 1929க்கு அடிச்சு கொம்பிளையின் பண்ணியி ருக்கனும்டா....."

"சரி சரி ..... விடு ..... ஹோலுக்குள்ள போவம்...." ■

■ பற்றி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



மட்டக்களப்பு மறைமாவட்ட

சமூகத் தொடர்பு நிலையம் நடத்திய

# மனித உரிமைகள்

## தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

இவ்வாண்டு 'மனித உரிமைகள் ஆண்டாக' அறிவிக்கப்பட்டதற்கிணங்க மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த மாதம் (செப்டம்பர்) 24ம் திகதி புதன்கிழமை 'மனித உரிமைகள்' தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கு க.பொ.த. உயர்தர மாணவர்களையும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்களையும் இலக்காகக் கொண்டு நடைபெற்றதாயினும், பேராசிரியர் மௌனகுரு மற்றும் ஊடகவியலாளர்கள் உட்பட வேறுபலரும் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.



இக்கருத்தரங்கு உரைகள், உரையாடல்கள் என வடிவமைக்கப்பட்டிருந்தது.

- மனித உரிமைகளும், நமது கடமைகளும்
- கல்விசார் மனித உரிமைகள்
- மனித உரிமைகளும் பெண்களும்
- தொடர்பு சாதனங்களும் மனித உரிமைகளும்

என்னும் தலைப்புகளில் உரைகள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாயினும் முதல் உரையை வழங்கவிருந்த மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்த திரு. A.C.A. அசீஸ் அவர்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் வரமுடியாது போனதால் ஏனைய மூன்று உரைகளும் முறையே கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் திருமதி. ரூபி வலன்ரீனா பிரான்சிஸ், பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு, சட்டத்தரணி F.X.S. விஜயகுமார் போன்றோரால் வழங்கப்பட்டன.

கருத்தரங்கை தொகுத்தும் இணைத்தும் சிறப்பாக வழிநடத்தினார் ஆனந்தா A.G. இராஜேந்திரம் அவர்கள். பார்வையாளர்கள் உரையாடல்களில் பங்குகொண்டு கருத்தரங்கை உற்சாகப்படுத்தினர். சமூகத் தொடர்பு நிலைய இயக்குனர் அருள்தந்தை லெஸ்லி ஜெயகாந்தன் அவர்கள் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து வரவேற்புரை வழங்கினார்.

கிறிஸ்தவ இலக்கியப் பேரவை உறுப்பினர் திரு.P.D.A. ஜெயக்குமார் இறைவணக்கம் இசைத்தார். புனித மிக்கேல் கல்லூரி பிரதி அதிபரும், தொண்டன் ஆசிரியர் பீட உறுப்பினருமான திரு. பெஸ்லியோ வாஸ் அவர்களின் நன்றி உரையுடன் கருத்தரங்கு நிறைவுக்கு வந்தது. கருத்தரங்கு சிறப்பாக, நன்றாக அமைத்திருந்தது என்பது பங்குகொண்ட பலரது கருத்தாகவும் இருந்தது.

– இன்பம் –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




– மற்றில்டா இராஜேந்திரம் –

1ந் திகதி : **குழந்தை இயேசுவின் தூய திரேசா:**



1873ம் வருடம் பிரான்ஸ் நாட்டின் நோர்மன்டி எனும் இடத்திலுள்ள அலென்கொன் எனும் ஊரில் அவதரித் தார் மாரி பிரான்சிஸ் தெரேசா மார்ட்டின். 1888ம் வருடம் இவர் தமது பதினைந்தாவது வயதினில் அப்போஸ் தலிக்கக் கார்மேல் சபையில் இணைந்து துறவ றத்தை மேற்கொண்டார். 1897ம் வருடம் புரட்டா தித் திங்கள் முப்பதாம் நாளில் விண்ணகம் சென்றார். அதிர்ஷ்டவசமாக இவரது துறவற வாழ்வின் ஒன்பது வருடகால வாழ்வைப் பற்றி, இவரது மேலாளர் கேட்டதற்கிணங்கி இவரெழுதிய இவரது சுயசரிதையில் இருந்து அறியக்கூடிய தாக உள்ளது. பிரெஞ்சு மொழியிலிருந்து இவை மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டபோது, இனிய கவிதை போன்றே இருந்தது. இவரது சபைச் சகோதரியான சிலுவையின் புனித ஜோன் என்ப வரது வார்த்தைகளைத் தன் வாழ்க்கையாக்கி னார். 'அன்புக்கு ஈடானது அன்புதான்' என்பன போன்ற சிந்தனைகள் எப்போதும் அவருடன் இருந்தன. ஒவ்வொரு நாளிலும், ஒவ்வொரு நேரத்திலும் சில புனிதர்களின் உதவியால் இதய பலத்தைப் பெற்றார். புனித பவுலின் வாக்கியங்க ளிலுள்ள ஆழ்ந்த மறைபொருளை அறிந்து கொண்டார். இறைவனைத் தந்தையாக அன்பு செய்வது, குழந்தை போன்று எளிமை, நம்பிக்கை யுடனான வாழ்வு, சிலுவையின் மறைபொருளை ஆழமாக அறிந்திருந்தமை ஆகியன இவரது வாழ்வின் "சிறிய வழி"யின் அடிப்படைக் கொள்கைகளாகின. அன்புக்குரிய அன்னையும், விண்ணக அரசியும், இறைவனுடைய தாயுமான தூய மரியன்னையைத் தன் ஆன்மீகத் தாயாகக் கருதி அவரிடம் தன்னை முழுமையாக அர்ப் பணித்தார். 1500 வருடங்களுக்கு முன் புனித அகுஸ்தினாரால் எழுதப்பட்டவற்றைக் கற்றார். எமது அன்னை மரியா, தன் வயிற்றில் இயேசு வைத் தாங்கியவர் என்பதன் மறை உண்மையை அவரிடமிருந்தே கற்றார். இச் சிறிய மலர் தூய அமலோற்பவ அன்னையைக் கனம் பண்ணிய விதமானது, இவரைப் பெரும் புனிதர்களின் வாரிசாக்கியது என்றால் அது மிகையாகாது. புனிதர்களையும், மிக அன்பு செய்தவர் இவர். தமது இருபத்து நான்காவது அகவையில் தமது படுக்கையைச் சூழ ரோஜா மலர்களின் நறுமணங் கமழ இறையடி சேர்ந்தார். திருச்சபை இவரைப் புனிதராக்கியது மட்டுமல்லாது, மறைவல்லுநராகவும் போற்றிக் கனம் பண்ணுகிறது.

2ந் திகதி : **காவல் தூதர்**



வானதூதர்கள் தூயவர்களாய், மனித சக்தி, மனோ சக்தி, ஈடிணையற்ற இயற்கை அழகு, மனோதிடம், நுண்ணறிவுடன் தூய ஆவிக்குரிய பேறுகளனைத்தும் கொண்டோராய்ப் படைக்கப் பட்டுள்ளனர். எந்நேரமும் இறைவனைத் துதித்து, இறைவனின் தூதராகப் பணிபுரியும் அதேவேளை பூவுலக மாந்தர்க்குக் காவலராகவும் உள்ளனர். நல்லொழுக்கம், நல்ல சிந்தனை, நல்ல வேலை களைச் செய்வதற்கான ஊக்கம் ஆகியவற்றை வழங்கி, எமது செபங்களை இறைவனிடம் சமர்ப்பிக்கவும் செய்கின்றனர். இத்தகைய பண்புகள் கொண்ட தேவதூதர் மத்தியில் எமது பாதுகாவலுக் காக நியமிக்கப்பட்டுள்ளவர்களே காவல் தூதர் என்றழைக்கப்படுகின்றனர். நமது விசுவாசப் படிப்பினையானது எம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காவல் தூதர் உண்டு எனவும், அவர்கள் எம் வாழ்நாள் முழுவதும் எம்மைப் பாதுகாப்பார் எனவும் கற்பிக்கிறது. காவல் தூதர்கள் சாத்தானுக்கெதிரான போரில் உதவுகின்றனர். பாவத்தில் விழாமல் காக்கின்றனர். சரியான பாதையில் வழிநடத்தி, நாம் பாவத்தில் விழுந்தால், உடனே அதைவிட்டு விலகச் செய்வதுடன், பாவச் சந்தர்ப்பங்களை விலக்கி வாழும் மனப்பக்குவத்தையும் தந்துதவுகின்றனர். அதுமட்டுமல்ல நமது மரணத் தறுவாய் வரைக்கும் எம்மைக் காக்கின்றனர். காவல் தூதரை எமக்குதவும்படி வேண்டும் செபத் தையும் நாம் திருச்சபையிடமிருந்து பெற்றுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 31.10.2014

# விவிலியம் கற்போம் – 136

பரிசுப் போட்டி

**யோசுவா : 16ம், 17ம் அதிகாரங்கள்**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

யோசேப்பின் மக்களுக்குக் கிடைத்த நிலப்பகுதியின் எல்லைகள்: எரிகோ பகுதியின் யோர்தானிலிருந்து, எரிகோ நீர் நிலைகளுக்குக் கிழக்காக, எரிகோவிலிருந்து பெத்தேல் குன்று வரையுள்ள பாலைநிலத்தின் ஊடே சென்று, ...................... லூசுக்குச் சென்று அர்கியரின் எல்லையான அதாரோத்தைக் கடந்து மேற்காக, யாப்லேற்றியரின் எல்லை நோக்கி இறங்கி, பெத்கோரோன் கெசேர் எல்லை மட்டும் சென்று கடலில் முடிகிறது. யோசேப்பின் மக்களான மனாசேயும், எப்ராயிமும் இதை உரிமைச் சொத்தாகப் பெற்றனர். எப்ராயிம் ...................... அவர்கள் குடும்பங்களின்படி உரிமைச் சொத்தாகக் கிடைத்த நிலப் பகுதியின் எல்லைகள்; கிழக்கே எல்லை அற்றரோத்து - அதார் முதல் மேல் பெத்கோரோன் வரை செல்கின்றது. மேற்கு எல்லை மிக்மெத்தாத்துக்கு வடக்கே சென்று கிழக்கே தானத்து சீலோவுக்குத் திரும்பி, அதை ...................... கிழக்காகக் கடந்து, யானோவாவிலிருந்து அற்றரோத்து நகருக்கு இறங்கி, எரிகோவைத் தொட்டு யோர்தானில் முடிவடைகின்றது. இவ்வெல்லை தப்பூவாகிலிருந்து மேற்காகக் கானா நதிவரை ஏறிக் கடலில் முடிகிறது. இதுவே, எப்ராயிம் மக்களுக்கான உரிமைச் சொத்து. அத்துடன் ...................... மக்களின் நகர்கள், சிற்றூர்கள் மத்தியில் நகர்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அவர்கள் கெசேரில் வாழ்ந்த கானானியரை வெளியேற்ற வில்லை. ஆகையால், இன்றும் கானானியர் எப்ராயிம் நடுவில் அடிமைகளாக வேலை செய்து வாழ்கின்றனர். ...................... முதல் மகன் மனாசேயின் குலத்திற்குக் கிடைத்த நில விபரம், மனாசேயின் முதல் மகனும் கிலயாதின் தந்தையுமான மாக்கிர் போர்வீரனாதலால் கிலயாதும், பாசானும் அளிக்கப்பட்டன. ஏனைய மக்களுக்கும் பங்கு கொடுக்கப்பட்டது. கிலயாதின் மகனான ஏபோரின் மகன் செலேபுகாதுக்கு ஆண் பிள்ளைகள் இல்லை. பெண்பிள்ளைகள் ஐவர் மட்டுமே. இவர்கள் ......................, தலைவர்களையும் அணுகி, "எங்களுக்கு உடைமைகள் அளிக்க ஆண்டவர் மோசேக்குக் கட்டளையிட்டார்" என்று கூறவே, அவர்களுக்கு உரிமைச் சொத்து வழங்கப்பட்டது. யோர்தானுக்கு அப்பாலுள்ள பத்துப் பங்குகள் மனாசேக்கு மேலதிகமாக வழங்கப்பட்டன. ......................கைப்பற்றப்படாத பகுதிகளில் உறுதியுடன் தங்கினார். இஸ்ரயேலரின் புதல்வர் வலிமை பெற்றதும் கானானியரை முற்றிலும் துரத்திவிடாமல், அடிமைகளாக அமர்த்திக் கொண்டனர். யோசேப்பின் புதல்வர் யோசுவாவிடம் "ஏன் எமக்கு ஒரே ஒரு ...................... அளித்தீர்? எம் மக்கள் பெருந்தொகையினர். ஆண்டவர் எமக்கு இத்துணை ஆசி வழங்கியுள்ளார்" என்றனர். யோசுவா அவர்களிடம், "நீங்கள் அதிகம் பேர் என்பதால் பெரிசியர், இரபாயிம் ஆகியோரின் காட்டு நிலத்துக்குப் போய் அதைத் திருத்திக் கொள்ளுங்கள். ...................... மலைப் பகுதியோ உங்களுக்கு மிகக் குறுகலானது" என்றார். அதற்கு அவர்கள் "மலைப் பகுதி எங்களுக்குப் போதாது; மேலும் சமவெளியிலிருக்கும் பெத்சானிலும் அதன் ஊர்களிலும், இஸ்ரியேல் சமவெளியிலும் வாழும் கானானியர் அனைவரிடமும் ...................... இருக்கின்றன" என்றார். யோசுவா "கானானியரிடம் இரும்புத் தேர்கள் இருப்பினும், அவர்கள் வலிமையுள்ளவர்களாய் இருப்பினும், நீங்கள் அவர்களை விரட்டுங்கள்" என்றார்.

**விடைகள்:** **யோசுவாவையும், கானானியர், பங்கை, இரும்புத் தேர்கள், எப்ராயிம், யோசேப்பின், மனாசே, யானோவாவுக்கு, புதல்வருக்கு, பெத்தேலிலிருந்து**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 136

பரிசுப் போட்டி




**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. இலங்கையில் இலவசக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
   *(1945 - 1940 - 1948)*

2. அவுஸ்திரேலியாவின் தலைநகரம் எது?
   *(சிட்னி - கன்பெரா - மெல்பேர்ன்)*

3. 'பரணி' பாடுவதில் சிறந்தவர் எனப் பெயர்பெற்றவர்
   (புகழேந்தி - படிக்காசுப் புலவர் - சயங்கொண்டார்)

4. கடலும் கடல்சார்ந்த இடமும் இப்படி அழைக்கப்படும்
   (பாலை - முல்லை - நெய்தல்)

5. அண்மையில் கிரிக்கட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்ற இலங்கை வீரர்
   (மலிங்க - மஹேல - மத்தியூஸ்)

6. அ, கின்ற, உம், என்று முடிகின்ற சொற்கள்
   (பெயரெச்சம் - வினையெச்சம் - முற்றெச்சம்)

பெயர் : ..........................................................................

முகவரி: ..........................................................................

..........................................................................

தொ.பே.இல. ..........................................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 136**
**தொண்டன்**
**அ. பெ. எண் - 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# போட்டி முடிவுகள்...

## விவிலியம் கற்போம் - 134 விடைகள்

சீகோரிலிருந்து, பெனான், இஸ்ரயேலுக்கு, யோர்தானுக்கு, ஒன்பது, மேய்ச்சல், மோசே, அளிப்பேன், வயதானவன், எபுன்னேயின்

## அறிவை வளர்ப்போம் - 134 விடைகள்

1. திருக்குறள்
2. ம.பொ. சிவஞானம்
3. சினிமாக் கலைஞர்களுக்கு
4. தடுமன்
5. தனிவளை வேணும்
6. செய்யா எனும் வாய்ப்பாட்டு வினையெச்சம்

**பரிசுகள் : அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS**

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுபவர்**

- செல்வி. அக்ஷிகா டேனிஷா டெரன்ஸ்
  26/15, 3ம் குறுக்கு,
  இருதயபுரம் மேற்கு,
  மட்டக்களப்பு.
- ஜோன் ஜிதேஷன் ஜெயராஜ்
  65/2, திருச்செந்தூர் முருகன்
  கோயில் வீதி,,
  கல்லடி, மட்டக்களப்பு.

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுபவர்**


- அந்தோனிமுத்து தயோதினி
  தேவகிராமம்,
  அலிகம்பை.
- எஸ். பிரகீஷன்,
  இல. 25/7, 1ம் குறுக்கு,
  சின்ன ஊறணி,
  மட்டக்களப்பு.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 85 முடிவுகள்**

- **முதலாம் பரிசு - 400/=**
  க. அஸ்வின்
  59/1, கதிர்காமர் வீதி,
  அமிர்தகழி,
  மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  R. தர்மிதா,
  614, கோரியடி வீதி,
  முகத்துவாரம்,
  மட்டக்களப்பு.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  ஜோ. அக்ஷய்,
  வி.வி. றோட்,
  பெரிய நீலாவணை.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org